கனா நிலயம்

V 5. No. 31 11.8.1932

ஜ

m211, N28kN

N32.5.31

119145

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

17 AUG 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஆகஸ்ட் மீ 11உ [No. 31

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 601
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 603
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 5-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 605
4. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
T. R. இராஜகோபால் 606
5. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 607
6. எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்)
G S. இரகுராமன் B.A. 610
7. பொதிகைக் கண்டு - (விலங்கின் பெயர்)
S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L., 611
8. வொர்ட்ஸ்வொர்த்
P. C. ஜயவேலு 612
9. கம்பராமாயணம் (கரன்வதைப் படலம்)
T. N. சேஷாசலம். B.A. B.L. 614
10. சொல்லூடாட்டம் - 6 616
11. வர்த்தமானம் 619

அறிக்கை :—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவர் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

கலாநிலயம்

விருப்பமும் கருவியும் 6.

இருப்பனவெல்லாம் இருந்திருந்து இறுதியில் இறந்தொழியவே கண்டிருந்தும் மாந்தர் தம் உயிரின்பால் இத்துணை உறுதியுடன் தொத்திக்கொண்டு விடாப்பிடியாய்க் கிடப்பது ஏனெனும் வியப்பு என்ஞான்றுமுளது. இதனைத்தான் மாயை என்பர் வேதாந்திகள். இம்மாயை என்பது, அலகிலா நித்திய சத்தியமாகிய பிரம்மத்தினிடத்திலிருந்தே பிறந்ததோ, பிரம்மத்தின் அலகுடைய தோற்றங்களின் ஒன்றுதானோ, பிரம்மத்திலேதான் சென்றொடுங்குமோ, அல்லது பிரம்மத்தினின்று முற்றிலும் வேறாயதோ அனைய விடயங்களை ஆராய்ச்சி செய்து வழக்கிட நாமிங்கு நினைக்கவில்லை. மாயை எவ்வயின் உற்பத்தியாயிற்றென்பதையேனும், மாயை மறைந்துதான் ஒருகாலத்திற் போதுமோ என்பதையேனும் ஒருவரும் அறியார். அல்லாது, நாந்தாம் மாயையினுள் இருக்கின்றோமோ, மற்று மாயைதான் நம்முள் இருக்கின்றதோ, என்பதைத் துணியவும் இயல்வதில்லை. இது எவ்வாறாயினும் ஆகுக. இதனினும் பெரியது இவ்வொருமை பன்மைகளுக்கிடையே ஊடாடும் மாயை. ஒருமையில் ஒன்றும் உண்மையல்லாதது இவ்வளவு எளியதாகவும் வெளிப்படையாகவும் ஐயத்திற்கு யாதும் இடமில்லாமலுந் தெரியக்கூடியதாக இருக்க, பன்மையில்மாத்திரம் அவ்வளவும் அவசியமும் உண்மையும் போல் அத்தனை மாந்தருந்தான் மயங்கி மதிப்பார்களோ, என வியந்து, ஆதலின், ஒருமைக்கில்லாத உண்மை பன்மைக்குச் சேரினும் சேரலாம்போலும் என ஐயிர்ப்பது அழகன்று. மாயையின் சூழ்ச்சியோ மிகப் பொல்லாதது. இவ்வுலகின் ஆச்சரியங்களிலெல்லாம் மிக்க ஆச்சரியமானது எது வென்ற வினாவிற்குத் தருமராசன், "என்றுந் தாம் இருப்பவர்போல் சனங்கள், வீதியிற்கொண்டேகும் பிணத்தை வேடிக்கை பார்ப்பதனினும் ஆச்சரியமானது வேறொன்றுமில்லை" என்ன விடைதந்த வாய்மையை ஒருவரும் மறக்கமாட்டார். எல்லாரும் இறக்கக்கண்டும் ஒருவரும் இறவாதார்போல் இவ்வுலகம் விவகரிக்கின்ற மாயையைப் போன்றது இவ்வொருமை பன்மை மாயையும் என்றக்கால் மறுப்பதெங்ஙனம்! ஒருமைக்கு உதவுவதின்றிப் பன்மையை மாத்திரம் பற்றிக்கொள்ளும் இப்பாதகம் "தலையின்றித் தலைநோயுண்டோ" என்னுமவ் வடமொழிப்பழமொழியால் நன்கு விளக்கப்படும். மருட்கை மிகவுடைத்து மானுடமனம். ஆதலின், பொதுஜனங்களும், அப் பொதுஜனங்களிடையே ஊடாடி, உரத்தக்கூவும் குரலொலியால் தலைவர்களாகிவிடுகின்றவர்களும், வாய்க்குவாய் வழிவழிக் கற்றுப்பேசும் படிற்றுரைகளால் மாயையின் ஆரவாரம் அதிகப்படுமேயன்றி வேறொன்றும் விளைந்

திடாது. இப்படியே இருந்துழன்றால் உய்யும் நெறிக்குப் புறங்கொடுத்தே இவ்வுலகம் என்ஞான்றும் நடப்பதாகும். ஆதலின், இவ்வகை மருட்கைகளினின்று தெளிந்த காட்சியால் தெய்வமே யனைய புலவர்தம் நல்லுரைகளல்லவோ மக்களை உய்விப்பதற்குரிய நன்மருந்தும் மந்திரமும் ஆதல்வேண்டும். திருவள்ளுவர் கம்பர் தோலாமொழித்தேவர், கார்லைல் எமர்ஸன் மேடர்லிங்க்போன்ற சான்றவர்தம் தூயமொழிகள் நம்முள்ளத்துள் தவழ்ந்து குடிகொள்ளுமாயின் வேண்டப்படுவது பின் வேறொன்றுமில்லையே. அம் மேலோர் மொழிகளைத் தழுவியல்லால் இக் கலாநிலயம் கருதியொன்றுங் கழறாமையால், அடக்கமுடைய இதன் நடைபற்றிச் சிந்தனைசெய்து விடயங்களின் உண்மையைத் தெளிந்துகொள்ள முயல்வார்க்கு உற்றதுணை உதவியா யமையுமென எண்ணத்துணிகின்றோம். உலகெலாம் ஒருபுடைசெல்ல நீ ரதற்கு எதிர்நடக்கின்றீரே, என்றோர் நண்பர் எம்மைக்கேட்டார். உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டு என்னுஞ் சொல் உண்மையாதலின், அவ்வுயர்ந்தோர் சொல்லும் நெறியே நாம் செப்புகின்றோம், என்பதை அடக்கமுடன் தெரிவித்துக் கொள்ளவே இதனை இயம்பினோமன்றி வேறன்று. அத்தகைய உயர்ந்தோர் எக்காலும் மிகச்சிலரே. எனினும் செம்மை என்பது அவர் திறத்திலேயே காணலாம். பெரும்பான்மையோர் (majority) புரிவதெல்லாம் எப்பொழுதும் பிழையே என்று மாத்யூ ஆர்னல்ட் அனைய அறிஞர் கூசாமற் கூறுவதை முகத்திரண்டு கண்ணுடையவர் ஒருபோதும் அயிர்க்க மாட்டார்.

முன்னுரைத்த அவ் வுயரிய இனத்தைச் சேர்ந்த மேலோர், முதலில் நம் விருப்பத்தைத் திருத்தித் தருகின்ற உதவியைச் செய்வதால் அவர்களே இவ்வுலகத்தின் உண்மை நண்பர்களாகின்றார். நாம் விரும்பத் தகுவது எதுஎன்பதை நிச்சயஞ்செய்துகொண்டபின் அவ்விருப்பத்தை நிறைவேற்றற்குரிய கருவிகளைப் பற்றிக் கருதப் புகலாமே. அரபிக்கடலின் ஆழத்தையும் இமயமலையின் உயரத்தையுங் கண்டுபிடிக்க மேனாட்டார் ஊக்கமுடன் முயற்சிகள் செய்ய நாம்மாத்திரம் இங்கு உறங்கிக் கிடக்கின்றோமே, என்று ஏங்குவார் ஒரு சாரார். கோயில் விக்ரகங்களின் மீதுள்ள நகைகளை விற்றால் பாடசாலைகளும் தொழிற் சாலைகளும் நிறுவலாமே, அதுவின்றி அவை வீணாகக் கிடக்கின்றனவே, என ஏங்குவார் ஒரு சாரார். இப்படியே பலர் பற்பல விதங்களில் ஏங்கிப்பேசக் கேட்டுவருகின்றோம். வாழ்க்கையின் பயனாக இவர்தாம் கொண்டிருக்கின்ற விருப்பத்தின் நோக்கத்திற்கு, அரபிக் கடலின் ஆழமும் இமயமலையின் உயரமும் பள்ளிக்கூடங்களும் தொழிற்சாலைகளும் எவ்வகையில் அவசியமாயிருக்கின்றன வென்பதைக் கணமேனும் இவர் கருதியதுண்டோ என்று யாம் பெரிதும் ஐயுறவெய்துகின்றோம். இப்படியே, வாழ்க்கையின் முடிவான விருப்பமொன்றை முதலில் உருச் செய்துகொண்டு அதனை எய்துதற்குச் சாதனங்கள் எவையெவை என்று ஆராய்ந்து பார்த்தபின், வாய்வழுங்கவரு மிவ் வெற்றுரைகள் நோக்கமும் நினைவுமற்ற ஓர் பாழும் படுகுழிக்கே பாய்கின்ற கொள்கை புலப்படும். திருவள்ளுவர் தம் நூலினுள் விபூதியையும் ருத்திராக்கத்தையும் பற்றி யாதும் பேசியதில்லை என்பதை நுணுகி நுணுகி ஆராய்ந்து, ஆதலின் அவர் உருவச்சிலைக்குத் திருநீறும் உருத்திராக்கமும் அணியலாகாதென மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்ற முயல்கின்ற "சுத்தத் தமிழ்மக்கள்," வாழ்க்கை முறையின் விருப்பத்தை அவ்வள்ளுவர் எவ்வண்ணம் வகுத்திருக்கின்றார் என்பதைத் தெரிந்துகொள்ளற்கு வேண்டிய கல்வியும் பயிற்சியும் பெற்று அதனைத் தெரிந்துகொண்டு, பிறகு, அவர் உருவச்சிலைக்குத் திருநீறு உருத்திராக்கங்கள் அணிவது எவ்வகையில் அந்நோக்கம் கைவருதற்கு இடையூறா யிருக்கின்ற தென்பதைச் சிந்திக்கப் புகுவாராயின் தம்மைக்கண்டு தாங்களே அளப்பரிய வியப்பெய்தியவராவார் என்பதில் யாதும் ஐயமில்லை அப்பயிற்சியைப் பெறுவது எளியதன் றென்பதையும் உணர்வோம். கலாசாலைப் பட்டங்களும் மகாநாட்டுச் சொற்பொழிவுகளும் வர்த்தமானப் பத்திரிகைகளின் பழக்கமும் இதற்குரிய கல்வியும் பயிற்சியும் அளிப்பதற்குப் போதா. உத்தியோகங்களேனும் கைப்பொருளேனும், தொண்டுசெய்ய வேண்டுமென்னும் ஊக்கமேனுங்கூட, ஆழ்ந்த அகன்ற கல்வியில்லாமையை நிரப்ப மாட்டா. ஆதலின், தர்க்கமுறைப் பயிற்சியுந் தத்துவநூல் ஆராய்ச்சியும் கைவந்த புலமையோர்க்கே ஆன்றோர் உரைகளின்உண்மையை உணர்தற்கியலும். உணர்ந்தவர் கூறும்சொற்களை உட்கொள்வதற்கியல்வதும் அப்பொழுதே. அதுவரையில், அரபிக் கடலின் ஆழமும் இமயமலையின் உயரமும், கோயில்நகையும், உருவச்சிலையின் உருத்திராக்கமும் இவைபோன்ற பிற பொருளல்லவைகளும் பொருள்போல் மயங்கிநின்று, வாழ்க்கையின் உயிர்நாடிகளாமெனப் பேசப்படுவதைத் தடுக்கவல்லார் எவருமில்லை.

கோகரணஞ் சூழாத காலாளால் பயனென்கொலோ என்று கேட்பார் திருநாவுக்கரசர். நம்மாழ்வார், "எம்மானைச் சொல்லிப்பாடி எழுந்தும் பறந்துந் துள்ளாதார்தம்மாற் கருமமென் சொல்லீர்" என்று கேட்கின்றார். அவர்களுக்குப் பதிற்சொல்லிய பின்னன்றோ மேற் செல்லவேண்டும். வாழ்க்கையின் நோக்கம் இன்னதாயிருப்பதே அமையுமென்று இந்தக் கடவுள் திருவருட் செல்வர்கள் இயம்பினர். இவர்கள் பாடிய திருமுறைகளையும் பிரபந்தங்களையும் திருத்தியமைக்க வேண்டுமென்று மகாநாடுகளில் தீர்மானங்கள் கொண்டுவரத் துணிகின்றார் சிலர் என்றால், அவர்களுடைய வீரத்தைக்கண்டு வியப்பதோ இரங்குவதோ என்பது தெரியாமல் திகைக்கின்றோம். அஞ்சாது செய்வதெல்லாம் ஆண்மையே என எண்ணிவிடவேண்டா. இருளைக்கண்டு அஞ்சாதார் யாவரென்பது நம் மெல்லோர்க்குந் தெரியும்-குருடரும் கள்வரும், கொடிய விலங்குகளும். இந்தத் திருத்தங்கள் தக்கனவென்றேனும் அல்லவென்றேனும் நாமிங்கு அறையவரவில்லை. அவைகளுக்கு ஆரவாரஞ் செய்கின்ற மனப்பான்மையைப்பற்றியே இது பேசுகின்றோம். இப்பிரசங்கள் இருக்குமாறு இருப்பதால் இவருடைய எந்நோக்கங்கள் நிறைவேறுவதற்கு 'என்ன இடையூறு எவ்வகையில்' விளைகின்றது என்பதொன்றே கேள்வி.

"நாம்" என்ற சுயவஞ்சகத்தை யெல்லாம் விலக்கிவிட்டு, "நான்" என்னவாக விரும்புகின்றேன் என்பதை ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் தனித்தனி தேர்ந்துகொள்ளற்குரிய கல்வியும் பயிற்சியும் பெறட்டும். இன்னதீமை இன்னதுயர் போதல்வேண்டுமென்ற எதிர்மறை விருப்பம் மட்டும் போதாது. அது போயபின் ஆவது எது வென்ற உறுதியும் வேண்டும். வலிக்காமலிருப்பதற் [illegible] அளிக்கப்பட்டிருக்கின்றது என [illegible] லை அன்றோ!

19145

தமிழ்ப் பாடம் 31.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[585-வது பக்கத் தொடர்ச்சி]

நளனுந் தமயந்தியும் தம் மக்களோடு இனிது வாழ்ந்து வருங்காலத்தில், இவ்விருவரையும் பிரித்துவைத்து நளனுக்குக் கீழ்மைகொடுக்கப் பன்னிரண்டு வருடம் காத்திருந்தான் கலி. நளனிடத்தில் குற்றம் ஒன்றுங்காணாததால் கலியினால் அவன்பால் அடைவதற்கு இயலவில்லை. இப்படியிருக்க, சந்தியாவந்தனஞ் செய்வதற்குக் கால்கழுவிய நளன் ஒருநாள் அழுக்குச் சிறிது நீங்காமல் வந்ததை நிபமாக வைத்துக்கொண்டு கலியும் அவனைப்பற்றினான். இதனைப் பின்வரும் மூன்று செய்யுள்கள் கூறுகின்றன.

ஆண்டிரண்டா றெல்லை யளவுந் திரிந்தேயுங்
காண்டகை யவெங்கலியுங் காண்கிலா—னீண்டபுகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோ னிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு. 29.

சந்திசெயத் தாள்விளக்கத் தானின் மறத்தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்தகலி—சிந்தையெலாந்
தன்வயமே யாக்கித் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து 30.

நாரா யணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போற—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மை
கற்றவனைச் சேர்ந்தான் கலி. [நெறி 31.

பதவுரை.

நாராயணாய நம: - நாராயணனுக்கு நமஸ்காரம்
என்று - என்று
அவன் - அந்நாராயணனது
அடியில் - பாதங்களில்
சேராரை - சேராதவர்களை
வெம் - கொடிய
துயரம் - துன்பம்
சேர்ந்தால்போல் - பற்றிக்கொள்வதுபோல்,
பார் - பூமியை
ஆளும் - ஆள்கின்ற
கொற்றவனை - அரசனை,
பார்மடந்தை-பூமிதேவிக்கு நிகரான தமயந்திக்கு
கோமனை - நாயகனை,
வாய்மை - சத்தியமாகிய
நெறி - மார்க்கத்தை
கற்றவனை - அறிந்தவனை,
கலி - கலியானவன்
சேர்ந்தான் - அடைந்தான்.

விரிவுரை:—பிறவித்துன்பம் பற்றும விருப்பதற்கு நாராயணனுடைய பாதங்கள்தாம் தஞ்சமெனவாழ்வதே வழி. அப்படித் தஞ்சமெனச் சேராதவரை துயரம் எவ்வளவு நிச்சயமாகப் பற்றுமோ அவ்வளவு நிச்சயமாகக் கலியும் நளனைப் பற்றினான் என்பது இச்செய்யுளால் கவி எடுத்துக் காட்டுகின்ற கருத்து. இந்த நிச்சயத்தைத் தவிர உவமைக்கும் பொருளிற்கும் வேறெவ்விதச் சம்பந்தமுமில்லை.

குறிப்பு:—சேரார் என்பது எதிர்மறை வினையாலணையும் பெயர்.

கொற்றவன், கோமான், கற்றவன் என்பன மூன்றும் நளனையே குறிக்கின்றன.

இனிவரும் பதினேழு வெண்பாக்களில், கலி புட்கரனை அழைத்துவந்து நளனோடு சூதாடவைத்து, அச்சூதிலே நளனை அவனுடைய செல்வம் அரசு சைநியம் யாவையும் தோற்பித்து, அவைகளைப் புட்கரனுக்கு வாங்கித் தருவதைப் புகழேந்திப் புலவர் கூறுகின்றார். இப்பாகத்தை நாம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை யாகையால் அச்செய்யுள்களைச் சில குறிப்புக்களோடு மாத்திரம் இங்கு வரைகின்றோம்.

நன்னெறியில் சூதா னளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றா னெடுத்து. 32.

புன்னை நறுமலரின் பூந்தா திடையொதுங்குங்
கன்னி யிளமேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேய்க்கு நாடன் கவறாடப் போயினான்
கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு. 33.

வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னெழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து. 34.

அடற்கதிர்வேன் மன்ன னவனேற்றின் முன்போ
யெடுத்தகொடி யென்னகொடி யென்ன—மிடற்சூது
வெல்லுங் கொடியென்றான் வெங்கலியா லங்கவன்
செல்லுங் கொடியோன் றெரிந்து [மேற் 35.

என்றோ மிதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றோய் மடற்றெங்கின் வான்றேற—ரூன்றேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட வென்றான் றுணிந்து. 36.

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. 37.

அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்கும் [தையே
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து. [கள் 38.

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூதை
பொருவரோ தக்கோர் புரிந்து. 39.

ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரி னாலோர் வழக்கு. 40.

குறிப்பு:—மாயம் பிடித்தாரின் வேறல்லர், என்பதை மாய் + அம்பு + இடித்தாரின் + வேறு + அல்லர், எனப் பிரித்து, "நெஞ்சிலே கொல்கின்ற அம்பு தைத்தவர்களிலும் வேறு அல்லர்" எனப் பொருள்கொள்க. அப்படிக்கின்றி நெஞ்சிடையே, மாயம் + பிடித்தாரின் என்று பிரித்தால் பொருள் சிறக்காததுடன் அந்த மூன்றாவது அடிக்கு மோனையும் இல்லாதுபோகும். "பிழைக்கும் மருந்து," "உய்யும் வழி" என்பன போன்ற வழக்குக்களில், பிழைக்கச் செய்கின்ற, உய்விக்கின்ற, என்னும் பொருள் அமைவதுபோல் 'மாய் அம்பு', என்பது மாய்விக்கின்ற அம்பு என அர்த்தமாகும்.

———

தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று. 41.

நிறையில் கவறுட னீநினைந்தா யாகின்
இறையிற் கதிர்முத்தஞ் சிந்துந்—துறையில்
கரும்பொடியா மள்ளர் கடாவடிக்கு நாடா
பொரும்படியா தென்றானிப் போது. 42.

விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணாரம்
ஒட்டினே னுன்பணைய மேதென்ன-மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து. 43.

காரேயுங் கூந்தலாள் கொங்கைமேற் காதலித்த
தாரேயுந் தோளான் றனிமனம்போல்—நேரே
தவறாய்ப் புரண்ட தமையனொடுங் கூடிக்
கவறாய்ப் புரண்டான் கலி. 44.

குறிப்பு:—இச்செய்யுளின் பொருள் சிறிது சந்தேகத்திற் கிடமாயிருக்கின்றது. கலி இருடபமாக உருவெடுத்துப் புட்கரனைத் தாங்கிவந்து சூதாடும்போது தானே அங்குச் சூதாடுங் காய் ஆக மாறினான். அப்படி மாறிய கலி சூதுக்காயாக (கவறாக) உருட்டினார் உருட்டும் போது புரண்டதைக் கவி இங்குக் கூறுகின்றார். அதுவரையில் நிச்சயம். ஆனால் கவறாகக் கலி புரள்வதற்கு மனம் புரள்வது உபமானமாக வந்திருக்கின்றது. யார் மனம்? மேகத்தை ஒத்த கூந்தலையுடையவளுடைய கொங்கையை விரும்பியவனது மனம். அவன் இங்கு யார்.? நளனாகவேனும் புட்கரனாகவேனும் கலியாக வேனும், இவர் மூவரும் அல்லாத வேறொருவனாக வேனும் இருத்தல் கூடும். தோளான், என்பது முன்சொன்ன மூவரையும் அல்லாமல் அயலொருவனைக் குறிப்பதாயின், கூந்தலாள் என்பதும் தமயந்தியைக் குறிக்காமல், பொதுவாக மாதர்பால் காமமுற்ற ஒருவனது மனம் தன்னிலை தடுமாறிப் புரள்வதுபோல் கலியும் கவறாகப் புரண்டான், என்று எடுத்துக் காட்டுவமையாகக் கொள்ளினும் அமையும்.

மற்றுக் 'கூந்தலாள்' என்பது இங்குத் தமயந்தியேயாயின் அவளைக் காதலித்த தோளான் என்று இங்குக் கூறப்படுபவன் யாவன்? நளனென்று கொள்ளுதற்குச் சில இடையூறுகள் இருக்கின்றன. கொங்கைமேல் காதலித்தான் என்பது அவனது தூய்மை வாய்ந்த அன்பிற்கு இழுக்காம். இனி, மெய்வரு போகத்திற்கே மனைவியை நச்சினானென்ற பழுது கொங்கையெனும் சொல்லைக்கொண்டே அவன்மீது சார்த்தாமல் பார்த்தால், அவன் மனம் இப்பொழுது புரள்வதற்கு நியம் இருப்பதுபோலும் இல்லைபோலும் தோன்றுகின்றது. நைடதத்தின்படி தமயந்தி சூதாடுமிடத்தில் இருந்திலள். அங்கு யாவும் தோற்றபின் நளன் அவள் மாளிகையை நண்ணி உற்றதைச் சொல்லினான். 'இவளைப் பணையந்தா' வென்று புட்கரன் பின் சுட்டிச் சொல்வதால், தன்னயலில் தமயந்தியை வைத்துக்கொண்டு நளன் சூதாடினான் என்பது புகழேந்தியின் கருத்து. சூதிலே முதல் மணிப்பூணாரத்தைப் பந்தயமாய் ஒட்டினான் நளன். தனக்குமாறாகக் கவறு விழுவதுகண்ட நளனது மனம், இம்மணியாரத்தைத் தோற்பது போலவே யாவையுந் தோற்க நேர்ந்தால் தமயந்தி மிகவருந்த அவ்வருத்தத்திற்குத் தான் காரணமாவதோ எனச் சிறிது புரண்டிருத்தல் அமையும். மற்றபடி, அதுவரையில் நளன் ஒன்றுந் தோற்கவில்லை யாதலாலும், முதற் பந்தயத்தில் கவறு விழுந்ததை இன்னும் கணக்குக்கூடப் பார்க்கவில்லை யாதலாலும் இதற்குள் மனம்புரள நளனுக்கு நியாயமில்லை.

கலியின் மனந்தான் தமயந்தியைக் காதலித்துப் புரண்டதென்று நினைப்பதற்கு நளவெண்பா இடந்தந்திலது. தமயந்தியைக் கலி விரும்பி, நளனைப் பிரித்து அவளைத் தான் அடைய எண்ணங்கொண்டிருப்பதாக நைடதத்தில் கூறப்பட்டிருப்பினும், தேவர்களுக்குற்ற அவமானத்திற் கெதிராய்ப் பழிவாங்குவதொன்றே கலியின் கருத்தென்று நளவெண்பாவிற் காண்கின்றோம்.

மனம்புரண்ட தோளான் புட்கரன், என்னும் பொருள்பொருந்தும். பின் அவளைப் பணையமாகவுங் கேட்கின்றான். ஆனாலோ செய்யுளினமைப்பையும் சொல்லின் தொடர்பையும் நோக்குங்கால் ஒரு சிறிது வலிந்தல்லாது, 'தோளான்' என்பதைத் 'தமையனொடு' என்பதோடு இணைக்க இயலாதென்பது தெரியவரும்.

———

வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்த பணைய முரையென்ன—வைத்தநிதி
நூறு பிரத்திரட்டி நூறுநூ றாயிரமும்
வேறாகத் தோற்றானவ் வேந்து. 45.

பல்லா யிரம்பரியும் பத்துநூ றாயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றதற்பின்—வில்லாட்
முன்றோற்று வானின் முகிறோற்கு மால்யானை [கள்
பின்றோற்றுத் தோற்றான் பிடி 46.

சாதுரங்கம் வென்றேன் றரும்பணைய மேதென்ன
மாதுரங்கம் பூணு மணித்தேரான்—சூதரங்கில்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப்
பூவையரைத் தோற்றான் பொருது. [பின்னுகுழற் 47.

கற்பின் மகளிர்பா னின்றுங் கலையல்குல்
விற்கு மகளிர்பான் மீண்டான்போல்—நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தா டிரு. 48.

குறிப்பு:—யாவையும் நளன் தோற்க, செல்வமெல்லாம் புட்கரனைச் சேர்ந்தன. செல்வத்திற் கிறைவியாகிய திருமகள், நளனைவிட்டு அக்கயவனை அடைந்ததற்குக் கற்புடைய மனைவியை நீத்துப் பரத்தையரைப் பார்த்தணையும் ஓர் கீழ்மகன் செயலைக் கவி உபமானமாகக் கூறுகின்றார்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[588-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 5-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

மொய்மாம் பூம்பொழில் பொய்கை
முதலைச் சிறைப்பட்டு நின்ற
கைம்மா வுக்கருள் செய்த
கார்முகில்போல் வண்ணன் கண்ண
னெம்மானைச் சொல்லிப் பாடி
யெழுந்தும் பறந்துந் துள்ளாதார்
தம்மாற் கருமமென் சொல்லீர்
தண்கடல் வட்டத் துள்ளீர்.

அவதாரிகை:—சென்ற தசகத்தில் ஆழ்வார், உலகிலுள்ள ஸர்வ வஸ்துக்களிலும் பகவான் உள்புகுந்து நடத்துகின்றானென்றும், அப்படிக் கலப்பதால் அவனுக்கு அவைகளின் தோஷம் தட்டுகிறதில்லை யென்றும், இவைகள் எல்லாம் கலப்பில்லாத வைகுண்டத்தில் அவனது திவ்விய மங்கள விக்கிரஹம் பக்தர்களுக்கு ரஸாவஹமாக நிற்கின்றதென்றும் அருளிச் செய்தார். இத்தசகத்தில் முதலில் செப்பிய தத்துவ உணர்ச்சி காரியகாரி அல்லவென்றும், பக்தர்கள் திவ்விய மங்கள விக்கிரகத்தையே தியானம்செய்து உய்ய வேண்டுமென்றும், பக்தர்கள் உள்ளபடியே அநுஸந்திப்பார்களாயின் பிரீதி அதிசயத்தாலே அவனுடைய குணங்களில் ஈடுபட்டுப் பிரஞ்ஞை தப்பி அக்குணங்களையே சொல்லிப் பிதற்றி ஊர் பல புக்கும் புகாதும் உலகர் சிரிக்கநின்று ஆர்வம்பெருகிக்குனித்தாடிக் களிப்பாரென்றும் உபதேசிக்கிறார். ஆகவே பக்தியோகப் பரவசப் பெருமை இத்தசகத்தின் இலக்கு.

குறிப்புக்கள்:—தண்கடல் வட்டத்துள்ளீர் தம்மாற் கருமம்என் சொல்லீர்,-மேல்கண்டபடி ஆடித்துள்ளாதாரால் என்ன கர்மம், கடல் சூழ்ந்த உலகத்துள்ளீரே சொல்லுங்கள். என்ன கருமம்-என்ன காரியம்-என்ன பிரயோஜனம்; அவர்களுக்கும் ஒரு பயனில்லை,உலகத்தாருக்கும் ஒரு பயனுமில்லை. நீங்கள் பதில் சொல்வதற்கும் யாதொன்றுமில்லை, என்பது அநுமானம்.

உரை:—"முதலைச்சிறையிலே யகப்பட்டுத் தன்னொலொருசெயலின்றிக்கே நின்றகைம்மாவுக்குத்தன்னளவிலே யருள் நிரவதிக ஆச்ரித வாத்ஸல்யத்தையுடையனை யெம்பெருமானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்துந் துள்ளாதார்தம்மால் என்ன பிரயோஜனம் உண்டென்று அவர்களை நிந்திக்கிறார்"-ஆறுயிரப்படி.

விசேஷக் குறிப்பு:—உலகத்தாரின் சீர்திருத்தத்தின் பொருட்டுப் பக்தர்களான ஸத்துக்களை 6-8-ம் பாசுரங்களிற் புகழ்வதுபோல்புகழவும் அஸத்துக்களை மற்றப் பாசுரங்களில் அவமதிக்கவும் பெரியார் கடமை பூண்டிருப்பதால், ஆழ்வாரின் ஸ்துதியும் நிந்தையும் இங்குப் பிராப்தம் என்று நாம் கொள்ளவேண்டும்.

———

2-ம் பாசுரம்.

தண்கடல் வட்டத் துள்ளாரைத்
தமக்கிரை யாத்தடிந் துண்ணுந்
திண்கழற் காலசு ரர்க்குத்
தீங்கி ழைக்குந் திருமாலைப்
பண்கடலைக் கொள்ளப் பாடிப்
பறந்துங் குனித்து முழலாதார்
மண்கொள் ளுலகிற் பிறப்பார்
வல்வினை மோத மலைந்தே.

பதக்குறிப்புக்கள்:-திண்கழற்கால்-மனிதர்க்குத்தீங்கு புரிவதே தொழிலாக வீரகடகம் அசுரர்கள் காலில் தரித்துக்கொள்கின்றார் என்றுதிருவுள்ளம். தடிந்து-ஹிம்ஸை செய்து.பண்கடலைக் கொள்ளப் பாடி-பண்கள் தலைக்கொள்ளப் பாடி என்று பிரியும். அதாவது கானங்கள் பாடுவதில் தலைக்குப் பித்தம்ஏறும்படி உற்சாகமாய்ப்பாடி, என அர்த்தம். திருமாலை-அசுரர்க்குத் தீங்குண்டாக்கி உலகத்தை ரக்ஷிப்பதால் மஹாலக்ஷ்மி பிரீதி யடைகிறதாகத் திருவுள்ளம். மண்...பிறப்பார்-இறப்பும் பிறப்புமாகிய ஸம்சாரத்தில் மூழ்குவார்கள்.

உரை:-பிறர்படும் துயரங்களை ஸஹிக்காதவனைப் பிறர்துக்கத்தைநீக்க உத்யோகிக்கிறவனைப் பாட்டுக்கள் பலபாடிப் பித்தேறும்படி பறந்து குனித்துஉழலாதார் நித்திய ஸம்ஸாரிகளாவார்கள்.

———

3-ம் பாசுரம்

மலையை யெடுத்துக் கன்மாரி
காத்துப் பசுநிரை தன்னைத்
தொலைவு தவிர்த்த பிரானைச்
சொல்லிச் சொல்லிநின் றெப்போதுந்
தலையினோ டாதனந் தட்டத்
தடுகுட்ட மாய்ப்பற வாதார்
அலைகொள் நரகத் தழுந்திக்
கிடந்துழைக் கின்ற வம்பரே.

கோவர்த்தன மலையை எடுத்து, இந்திரன் கல்லாகப் பெய்த மழையினின்றும் பசுநிரைகளைக் காப்பாற்றி அவைகள் தொலைவு-அதாவது சாகாமல்-தப்ப வைத்த கிருஷ்ணபகவானைச் சொல்லிச் சொல்லி எப்போதும்நின்று தலைகீழேதட்ட விவிதசேஷ்டிதர்களாய்,பூமியில் சிலகால் தலைகளும் சிலகால் புச்சங்களும் படும்படியாகத் துள்ளித் துள்ளிப் பக்திப் பரவசராய் அநுஸந்திக்காதவர்கள் யாவர்களிருக்கிறார்களோ அவர் நரகத்தினின்றும் ஒருபொழுதும் மீளமாட்டார்கள்.

குறிப்பு:—ஆதநம் - ஆசநம் - அதாவது 'பூ'தலம். தடுகுட்டமாய்-தேஹத்தின் எந்தப் பாகம் ஸ்திரமாயிருக்கிறதென்று சொல்லவியலாத வண்ணம். வம்பரே-புகுந்தும் வெளிப்பட்டும் திரும்பியும் புகுகிறவர்;இவர்களுக்கு நரகத்தினின்றும் மீட்சியில்லை என்று திருவுள்ளம்.நரகத்திற்குச் செலுத்தும் பக்திஹீனதையை அறிந்திருந்தும் தவத்தை முயற்சிக்காதவர்.

———

4-ம் பாசுரம்.

வம்பவிழ் கோதை பொருட்டா
மால்விடை யேழு மடர்த்த
செம்பவ ளத்திரள் வாயன்
சிரீதரன் றொல்புகழ் பாடிக்

கும்பிட்டு நட்டமிட் டாடிக்
கோகுகட் டுண்டுழ லாதார்
தம்பிறப் பாற்பய னென்னே
சாது ஜனங்க ளிடையே.

பதக் குறிப்புக்கள்:—கோகு-ஒழுங்கு - மரியாதை-கிரமம். உகட்டு - தலைகிழாய் புரண்டு; உண்டு - ரஸத்தை அநுபவித்து.

ஸ்ரீதரணுகையாலே நப்பின்னைப்பிராட்டியோடு கலக்கைக்காக எருதுஏழுகளை அடக்கி ஜெயித்து, அதினாலுண்டானபிரீதியாலே புதுக்கணித்ததிருப்பவளத்தையுடைய கிருஷ்ணனுடைய ஆச்ரிதரை மகிழச்செய்யும் குணத்தை நினைந்து நினைந்து மெய்ம்மறந்து, பகவான் ஒருவனையே சிந்தித்து மோஹித்துக்கிடக்கும் வைஷ்ணவர்கள் நடுவே இப்படிப் படாதவர்கள் என்ன பிரயோஜனத்திற்காகப் பிறந்தார்கள் ?

குறிப்பு:—இந்தப்பாசுரத்திலும் முன்பாசுரத்திலும் எம்பெருமானது திவ்யாவதாரமான கிருஷ்ண பகவான் சேஷ்டிதங்களைப் பிச்சேறப் பண்ணுமளவும்உள்ளத்தில்நினைத்துப் பக்தர்கள் பிரீதிப் பரவசமாகின்றார்களென்று அருளிச்செய்கிறார். ஆகவே இத்தசகம் பகவானது திவ்யமங்கள விக்ரஹம் பக்தர்களைப் பித்தர்கள் போன்று நடிக்கவும் நடக்கவும் செய்யும் குணமுடையதென்று கற்பிக்கிறார்.

5-ம் பாசுரம்.

சாது ஜனத்தை நலியுங்
கஞ்சனைச் சாதிப் பதற்கு
ஆதியஞ் சோதி யுருவை
யங்குவைத் திங்குப் பிறந்த
வேத முதல்வனைப் பாடி
வீதிகடோறுந் துள்ளாதா
ரோதி யுணர்ந்தவர் முன்னு
வென்ச விப்பார் மனிசரே.

பதக்குறிப்புக்கள்:—சாதுஜனம்-தேவகி வஸுதேவர் முதலானவர். ஆதியஞ் ஜோதி - ஆதி அம் ஜோதி எனப் பிரியும். ஆதி - அவதாரங்களுக்கும் முற்பட்ட அம் - அழகான, ஜோதி - ஸ்வயமே பிரகாசரூபமான ஜோதி சுவரூபம். அங்கே வைத்து இங்குப் பிறந்த-வைகுண்டத்தில் என்ன தேஜஸுளதோ அதுபோலுள்ள தேஜஸையுடைத்தானவனாய் இந்த லோகத்தில் அவதரித்த; ஓதியுணர்ந்தவர்-வேதங்களின் தத்துவங்களைச் செவ்வனே கிரஹித்து அவைகளில் ஊன்றியிருப்பவர்; என் சவிப்பார்-மேற் சொன்ன உணர்ச்சியிருப்பார் முன் என்ன ஜபம் செய்வார்கள்; இவர்களுடைய ஜபத்தின் ஆற்றல் வெளிப்படாது. திவ்விய ரூபத்தோடு தன் பக்தர்களான சாதுஜனங்களை ரக்ஷிக்கும் பொருட்டு இந்த லோகத்தில் மனுஷ்யனாகப் பிறந்து தானும் மஹாகுணத்தை உடையவனாயிருந்தவனைப் பாடி வீதிகள்தோறும் திரியாதார் எத்துணையேனும் அறிவுடையரேனும் அவர்களால் ஒரு பிரயோஜனமுமில்லை" என்கிறார்.

6-ம் பாசுரம்

மனிசரும் மற்றும் முற்றுமாய்
மாயப் பிறவி பிறந்த
தனியன் பிறப்பிலி தன்னைத்
தடங்கடல் சேர்ந்த பிரானைக்
கனியைக் கரும்பின் சாற்றைக்
கட்டியைத் தேனை யமுதை
முனிவின்றி யேத்திக் குனிப்பார்
முழுதுணர் நீர்மையினாரே.

உரை:—மனிதரும் - மனுஷ்யராகவும்; மற்றும் - வேறு எவரும் - அதாவது தேவர்களாகவும்; முற்றுமாய் - எல்லா ஜெந்துக்களுமாய், அதாவது ராமன் கிருஷ்ணன்போன்றமனுஷ்யரூபத்தோடு அவதரித்து வாமனன்போன்று தேவரூபத்தோடு உபேந்திரனும் மத்ஸ்யகூர்மவராக ஹயக்ரீவாவதாரங்களாயும் அவதரித்து; தனியன் - ஒப்பில்லாதவனை; பிறப்பிலி தன்னை - கர்மவசத்தால் பிறக்காதவனை, தடங்கடல் சேர்ந்த - விசாலமான சமுத்திரத்தில் க்ஷீராப்தியில்பள்ளிகொண்ட; பிரானை-பிரபுவை, கரும்பின்சாற்றை கட்டியை - வெல்லம் கற்கண்டுபோல் பக்தர்களுக்குச் சுவை அளிக்கவல்லவனாய்; அமுதை - அமிர்தத்தை; தேனை-தேனை; முனிவு-பொறுமை; இன்றி; - இல்லாமல், ஏத்தி - துதிசெய்து, குனிப்பார் - நடிப்பவர்கள் ; முழுதுணர் நீர்மையினாரே - ஸர்வஞ்ஞர்; எல்லா ஞானமும் முழுவதும் அவரிடம் குடிகொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறவர்கள்.

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[590-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னமும், ஞானஞேயங்களை ஒன்றுபடுத்தி நிற்கும் மூலவஸ்துவை அறிவதினின்று, அதாவது மூதறிவு (பிரம்ம சைதன்னியம் Universal Consciousness) மூலமாக அவைகளின் இணக்கத்தை அறிகிறோம் என்பதும் இவர் முடிவுகளில் ஒன்றாகும். இவ்வாறாயின், ஞானமும் ஞேயமும் தொடர்பற்று முரண்பட்டுத் தனியாக நிற்பன என்ற இவருடைய சித்தாந்தம் மறுக்கப்பட்டு, அவைகளுள் தொடர்பும் சம்பந்தமும் உண்டென்று ஊர்ஜிதமாவதை இவர் கவனிக்கவில்லைபோலும்! உண்மையாதெனில், ஞானமும் ஞேயமும் ஒன்றற்கொன்று எதிரானவைகளெனக் கொண்டபோதிலும், மேன்மேல் விசாரிக்கையில், அம்முடிபு பொருளும் பொருத்தமும் தெளிவு மற்றதென உணர்ந்து, எவ்விதத்திலாயினும் அவைகளைப் பிணைத்தற்கு முயற்சித்து, மேற்காட்டியபடி, வெவ்வேறுசமயத்தில் வெவ்வேறு முடிபுக்கு வந்தனர் என்பதாம்.

அந்தம் அனந்தமாகவும், அனந்தம் அந்தமாகவும் எவ்வாறு மாறுகின்றனவென்பதை ஒரு சிறிது ஆராய்வோம். உருவத்துடன் தோன்றும் புறப்பொருள்களை நாம் மெய்ப்பொருள்களெனப் பாவித்துவருகிறோம். உருவமாவது தோன்றி விரிந்துகிடத்தல், அல்லது நிரம்பிநிற்றலாகும்; இதற்கு ஆதாரமாவது வெளி ஆகும்; அதாவது, பற்பல உருவங்கள் தாங்கி, வெறும் வெளியைப் (empty space) பருப்பொருள்கள் பல அளவுகளில் நிரம்பி நிற்பதாகப் பாவித்து வருகிறோம். அவ்வெளியை நிரப்பிநிற்கும் அளவு வித்தியாசங்களே பற்பல தோற்றங்களுக்குக் காரணமாவன; அதாவது, அவ்வெளியின் சிறியதோர் பாகத்தை நிரப்பிநிற்கும் பருப்பொருள்கள் சிறியனவாகவும், பெரும் பாகத்தை மூடிநிற்பவை பெரியனவாகவும் தோன்றுகின்றன. யதார்த்தத்தில், வெளியென்பது இயைந்துளது, பற்பல பாகங்களாக வகுக்கப்படாதது. வெறும் வெளியைப் பல பாகங்களாகக் கூறுபடுத்தி, உலகாதிகளை எல்லைக் குட்படுத்திக் கணக்கற்ற தனிப்பொருள்களாகத் தோற்றுவித்து மயக்குவது மனோபாவனையாகும். வெளி என்பது அனந்தமாதலால், அதன் ஆதேயங்களான புறப்பொருள்களும் தொடர்பற்றுத் தனித்தனியாய் நிற்பனவல்ல. அதாவது, வெளியைப்போல் பருப்பொருள்களும் அனந்தமானவை என்பது தெளிவாகின்றது. இதுவேபோல், உலகாதிகளை ஆராய்ந்து பார்க்கையில், உள்ளெழும் உணர்ச்சிகளும் (feelings), கருத்துக்களும் (ideas), ஞானமும், படிப்படியாக உயர்ந்து இயைந்து விளங்குகின்றன. உணர்ச்சிகளையும், கருத்துக்களையும், ஞானத்தையும் பிரித்துத் தனிப்படுத்துவதும் அம் மனோபாவந்தான். இவ்வாறு பருப்பொருள்களினதும் அகநெகிழ்ச்சிகளினதும், அல்லது ஞானஞேயங்கள் ஒவ்வொன்றின் அனந்தத்வத்தை இவர் நிரூபித்து ஸ்தாபிக்க முயற்சித்திருக்கின்றார்.

பிரபஞ்சம்பிரபஞ்சாதிகளைப் பற்றி மேன்மேலும் விசாரித்துப் பார்க்கையில், ஐய விபரீதங்களும் குழப்பமும் எழுதல் இயல்பாகும். அவைகளைப் போக்கித் தெளிவாகச் சித்தாந்தப்படுத்தற்கு முடியாதபொழுது மனக்கற்பனை—மனோபாவனை—அவித்தை—மித்தை எனப் பெயரிட்டு விடுதலால் அச் சந்தேக விபரீதங்களும் குழப்பமும் தெளிவடையாமற் போகின்றன. உண்மையும் விளங்காது. இல்லாதது தோன்றாது, உளது இலதாகாது; தோற்றம் என்பது வெறும் பாழன்று. ஆதலால், அந்தம் தோற்றம் என்றவைகளின் மெய்த்தன்மையை விசாரித்தறியாமல், வெறும் மித்தையெனத் தள்ளல் ஞானமாகாது.

மனோபாவனை—கற்பனை—அவித்தை என்பன என்னையோ? அந்தம்—எல்லை—முடிவு—பாகம்—பேதமாகியவைகளைப்பற்றிய கருத்து எழுதல் எவ்வாறோ? விசால அநுபவத்தாலும், அகன்ற கேள்வியாலும், கூரிய அறிவினாலும் பூர்ணநிலை யெய்தியவுடன் அவைகள் மறைந்துவிடுமெனக் காட்டியிருக்கின்றார். ஆனால் அதுவரையிலும் அவைகள் இருந்து தீர்வன, தோன்றித்தான் வருவன. ஒளியில்லாதபொழுதுதான் இருள் மூடி நிற்கின்றது; எனின், இருள் இல்லையெனச் சாதித்தல் பொருந்துமோ? சத்துதான் உளது, அசத் இல்லையெனின், அசத் என்ற கற்பனை உண்டாவது எவ்வாறோ ?

இன்னமும், மூலவஸ்து பரிபூர்ணமானது (Whole) ஆதலின் குறை என்பது வெறுங் கற்பிதமெனின், அக் கற்பிதம் எவ்வாறு எழுகின்றதோ? இவைகளைப் பற்றிய உண்மைதான் என்னை? இவைகளை எவர்தாம் தெளிவித்துளார்?

பூர்ணத்வம்(Wholeness) ஒவ்வொரு "பாக" த்திலுமில்லையானால், பூர்ணம் ஆகாது. நன்மையில் தீமையும், தீமையில் நன்மையும் இராவிடின், அவைகளிரண்டும் ஒன்றிக் குணமாக உயராது; இதுபோல், ஞானத்தின் குணம் ஞேயத்திலும், ஞேயத்தின் தன்மை ஞானத்திலும் இருந்தாற்றான், அவைகளுள் அறிவும் உண்டாகும்; கடவுட்டன்மையும் பூர்ணத்வமும் அவ்விரண்டிலுமில்லாவிடின், அவைகள் இயைந்து உயர்ந்து மூலவஸ்துவுடன்ஐக்கியமாகிச் சுத்த பூரணமாக விளங்கா.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[550-வது பக்கத் தொடர்ச்சி]

பிரமேயம்—அருத்தம்.

(2) குணம்.

குணம்—இலக்கண நூலில் தொழிற்பண்பென்னுங் கால் வினையைப் பண்பில் அடக்கிக்கூறுவர். இது தர்க்கத்திற்கு உடன்பாடானதன்று. குணம் சாமாநிய முடையது, அசமவாயிகாரணமாவது வினையல்லாதது. எனவே குணம் அசைவடிவினதாகாது. இதற்கு ஆதாரம் பின்வரும்தண்டியாசிரியர் சூத்திரங்களாகும்.

"எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்"

"அதுவே,
பொருள் குணம் சாதி தொழிலொடு புலனும்"
பொருளணியியல் 28&29.

எனவே குணம் தொழிலிற் சேராது. * குணத்தின் தன்மையை அப்பர் திருவிருத்தத்தா லுணர்க:—

ஊனத்தை நீக்கி யுலக
றியவென்னை யாண்டுகொண்டான்
தேனைத் தெனக்கினி யான்றில்லைச்
சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னெஞ்சை
யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.
கோயில் திருவிருத்தம் 6.

அண்மை, இன்மை, உண்மை, வன்மை இவை பண்பாக, குணம் யாண்டும் தனக்கொரு குணமின்றித் திரவியத்தையே ஆசிரயித்திருக்கும். குணங்கள் இருபத்தினான்குவகை யென்பர் தர்க்க நூலார். அவையாவன:—

1. ரூபம் 2. ரசம் 3. கந்தம் 4. பரிசம் 5. சங்கியை 6. பரிமாணம் 7. பிரதக்துவம் 8. சையோகம் 9. விபாகம் 10. பரத்துவம் 11. அபரத்துவம் 12. குருத்துவம் 13. திரவத்துவம் 14. சிநேகம் 15. சத்தம் 16. புத்தி 17. சுகம் 18. துக்கம் 19. இச்சை 20 துவேஷம் 21. பிரயத்னம் 22. தருமம் 23. அதருமம் 24. சம்ஸ்

---

* பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றி
னொன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை.
தண்டியலங்காரம் - பொருளணியியல் 30.

காரம் என்பன. இவற்றின் இலக்க முறையையும் கவனிக்க.

மேற்கண்ட குணங்களைத் * திருநாவுக்கரசு நாயனார் பலவகைகளில் விவரித்துக் காட்டுகிறார். அவை வருமாறு:—

பிரிவாய குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொரு நான்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கி னாரும்
இடைமருது மேவிய வீச னாரே

திருவிடைமருது - திருத்தாண்டகம் 7.

குறிப்பு:—மேற்கண்ட பாசுரத்தின் பொருளை அறிஞர் ஆராய்ந்து விருத்தியுரை செய்வாராக

இக்குணங்கள் இருபத்தினான்கினையும் முறையே பரிசோதிப்போம்:—

(1) ரூபம்:—இது கட்புல மாத்திரையாற் † கிரஹிப்பது, ஜாதியுடையது. இது பிருதிவி முதலிய மூன்றன்கண் இருப்பது. இது வெண்மை முதலிய பலவகை. பிருதிவியிற் பாக ரூபம். எனவே பிருதிவியின் பாகத்தில் நிற்பது - இது விழிமாத்திரத்தால் கவரப்படும் குணம்.

ரூபம் எழுவகைத்து : அது வெண்மை, கருமை,‡ பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரம் என்பன. நீரில் விளங்கா வெண்மையும் தேயுவில் விளக்கமான வெண்மையு முண்டு. சிலர் சித்திரத்தை அங்கீகரியாமல் ரூபம் அறுவகையென்பர். பிருதிவி மாத்திரத்தில், அதாவது, பரமாணு வடிவப் பிருதிவி, காரிய வடிவப் பிருதிவி யென்னு மிரண்டிலுமுள்ள ரூபம் அநித்தியம். அப்புப் பரமாணுவிலும், தேயுப் பரமாணுவிலும் நித்தியம். காரிய அப்புதேயுக்களில் அநித்தியம்.—தேயுவில் அபாக (பாகத்தாலுண்டாகாத) வெண்மையொளி அப்புவில் ஒளியில்லாத அபாக வெண்மை.

வெள்ளை நீறணி மேனிய வர்க்கெலாம்
உள்ள மாய பிரானு றுறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே

திருக்கடம்பூர்—திருக்குறுந்தொகை 9.

(2) இரசம்:— இரசநேந்திரியத்தாற் கிரஹிக்கப்படுவது, இதன் விசேடகுணம். இது பிரிதிவி, அப்பு இரண்டில் மாத்திரந்தான் இருக்கும். அவற்றுள் பிரிதிவியில் மதுரம், புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் அறுவகைப் பாகசமும், அப்புவில்$ மதுரமும் அபாகசமும் (insipid) நித்தியநித்தியமாம். நித்தியம் பரமாணுவான அப்புவிலும் அநித்தியம் காரியமான அப்புவிலுமெனக்க.

கரும்பிருந்த கட்டிதனைக் கனியைத் தேனைக்
கன்றாப்பின் நடுதறியைக் காறை யானை
இரும்பமர்ந்த மூவிலைவேல் ஏந்தி னானை
யென்னானைத் தென்னானைக் காவான் றன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை சூடி னானைத்
தூயானைத் தாயாகி யுலகுக் கெல்லாம்
தரும்பொருளைத் தலையாலங் காடன் றன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.

திருத்தலையாலங்காடு - திருத்தாண்டகம் 8.

(3) கந்தம்:—கந்தம் கிராணத்தாற் கவரப்படும் விசேடகுணம்,பிருதிவி மாத்திரையினிருப்பது, அநித்தியமே. அது நறுநாற்றம் தீநாற்ற மென்றிருவகை. நீர் முதலியவற்றிற் கந்தந் தோன்றுதல் சையுக்த சமவாயத்தா லென்றறியத்தக்கது. பிருதிவியின் சம்பந்தத்தாலேயே நீரிலும் காற்றிலும் நாற்றம் தோன்றும்.

(4) பரிசம்:—இது துவக்கிந்திரியத்தாற் கிரஹிக்படும் விசேடகுணம். பிருதிவியாதி நான்கிலும் உள்ளது. அது தண்மை, வெம்மை, சமம் என மூவகை.

(5) சங்கியை:—எண். நமது தேசத்தில் மேல்நாட்டைக்காட்டிலும் பெரிய இலக்கங்கள் உள. Bllion என்பதே மேல்நாட்டுக் கணிதத்தில் பெரிய அளவை ஆகும். நமது எண்ணானது ஏகம், தசம், சதம், சகஸ்திரம், தசசகஸ்திரம், லட்சம், தசலட்சம், கோடி, தசகோடி, அற்புதம், நிற்புதம் கர்வம், மகா கர்வம், பத்மம், மகாபத்மம், க்ஷோணி, மகாக்ஷோணி, சங்கம், மகாசங்கம், க்ஷிதி, மகாக்ஷிதி, க்ஷோபம், மகாக்ஷோபம், நிதி, மகாநிதி, சாகரம், மகாசாகரம், அரி, மகா அரி, சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருது, மகாகிருது, என முப்பத்தாறு ஸ்தானமுடைய எண்கள் உள்ளன.

அவற்றுள் ஒருமை இருவகை. நித்த, அநித்தபேதத்தாலாவது. காரியத்தை அடைந்தது அநித்தம். காரணமாய் நின்றது நித்தம். இருமை அநித்தமே. ஆகவே முத்திநிலையை அத்துவைதநிலையென்பர் அப்பர். இருதன்மை யுள்ளவரையில் மோட்சமின்றாம். பெருந்தவங்களில் ஒன்றிருத்தலே சித்திக்கு இடமாகும். கீழ்

* பரம்பொருளின் குணங்களைக் கூறுங்கால், அப்பர்
திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டல்மேல்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்ற'மேய பரமர் போலும்
எண்குணத்தா ரெண்ணு யிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே.

திருவிடைமருது - திருத்தாண்டகம் 4.

† உருவமு முயிரு மாகி யோதிய உலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான்மிக்க
அருவிபொன் சொரியுமண்ணு மலையுளா யண்டர்கோவே
மருவிநின் பாதமல்லால் மற்றொரு மாடிலேனே.

திருவண்ணமலை-திருநேரிசை 3.

‡ "நிறங்கொள் கண்டத்து நின்மலன் எம்மிறை
நிறங்கொள் மால்வரை யூன்றி யெடுத்தலும்"

திருவெறும்பியூர்—திருக்குறுந்தொகை.

$ தேனார் புனற்கெடில வீரட் டமும்
திருச்செம்பொன் பள்ளி திருப்பூ வணம்
வானோர் வணங்கும் மணஞ்சே ரியும்
மதிலுஞ்சை மாகாளம் வார ணாசி
ஏனோர்க ளேத்தும் வெகுளீச் சரம்
இலங்கார் பருப்பதத்தோ டேணார் சோலைக்
கானார் மயிலார் கருமா ரியுங்
கறைமிடற்றார் தம்முடைய காப்புக ளே.

திருவதிகை வீரட்டானம்-காப்புத் திருத்தாண்டகம்

ந்ம் அப்பர்பாசுரங்கள் இந்தத்தர்க்கக்கொள்கையை ளியாக்குவது காண்க:—

ஒன்றிய தவத்தின்மன்னி
யுடையனு யுலப்பில்காலம்
நின்றுதங் கழல்களேத்தும்
நீள்சிலை விசையனுக்கு
வென்றிகொள் வேடனாகி
விரும்பிவெங் கானகத்துச்
சென்றருள் செய்தார்சேறைச்
செந்நெறி மேவினாரே.

திருச்சேறை - திருநேரிசை. 3.

ஒன்றி யிருந்து நினைமின்க
ளுந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தா னடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு
மான்றன் றிருக்குறிப்பே.

கன்மன வீர்கழி யுங்கருத்
தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வீர்நவில் தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெற்றிக் குன்றது
போலப் பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன்
போந்த சுவடில்லையே.

கோயில் திருவிருத்தம் - 2, 3.

ஒன்றவே யுணர்திராகில்
ஓங்காரத் தொருவனாகும்
வென்றவைம் புலன்கள்தம்மை
விலக்குதற் குரியீரெல்லாம்
நன்றவன் நாரணனு
நான்முகன் நாடிக்காண்குற்
றன்றவர்க் கரியர்போலு
மதிகைவீ ரட்ட னாரே.

திருவதிகை வீரட்டானம்-திருநேரிசை - 9.

ாண்கள் முப்பத்தாறு ஸ்தானமட்டுமே யெண்ணக்)மென்பதும் அதற்குமேல் எண்ண மனிதனாலாகா ன்பதும் தர்க்கத்தின் துணிபு. எனவே, மகாகிருது மேல் கூறவேண்டியது யாதேனு முளதேல், அதைப் 'த்தம் என்பர். பராத்தம் என்பது அளவிறந்த ன்பது. கருத்து (Infinity) ஒன்றுக்குக் கீழ்பட் ஏண்ணை எடுக்கக்கூடியதில்லை. ஒன்றன் பின்னம் படினும், அப்பின்னத்தையும், சங்கியையில் ஒன்று ;றே எடுக்கலாமன்றி அவ்விலக்கத்திற்கும் குறை நாய்க் கொள்ளலாகாது. கால் என்பது ஒன்றில் lலொரு பாகமாயினும், அக் காலும் தனியே எடுத் ; பார்க்கின் ஒரு பொருளாதலால், அது ஒன்று ாலும் எண்ணில் அடங்கவேண்டியதா யிருக்கும். ாகயால் ஒன்றற்குக் கீழ்பட்ட எண்ணும் பராத்தத் கு மேற்பட்ட எண்ணுமின்மையின் ஒன்றென் பது சிற்றெண்ணும், பராத்தமென்பது பேரெண்ணுமாம். இந்த உலகத்தில் உள்ள பொருள்களின் தன்மை எண் அல்லது சங்கியையில் கட்டுப்படும் தன்மை; கடவுளின் தன்மை அவ்வாறு கட்டுப்படாத தன்மை, ஆயினும் கடவுள் ஒருவர் என்று கூறுவதால் ஒருமை யென்னும் எண்ணின் வழி காட்டுகின்றோம். ஆயினும் அவர் பராத்தமான தன்மையர். இதனால் சிவபெருமான்,

எண்ணகத் தில்லை யல்ல ருளரல்ல ரிமவான் பெற்ற
பெண்ணகத் தரையர் காற்றிற் பெருவலி யிருவராகி
மண்ணகத் தைவர் நீரி னல்வர்தீ யதனில் மூவர்
விண்ணகத் தொருவர் வீழி மிழலையுள் விகிர்த னாரே.

திருவீழிமிழலை - திருநேரிசை. 6.

இக்கருத்தைத் திருஞான சம்பந்தரும்,

எண்ணிடை யொன்றின ரிரண்டின ருருவ
மெரியிடை மூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடை யைந்தினர் ஆறின ரங்கம்
வகுத்தன ரேழிசை யெட்டருங் கலைசேர்
பண்ணிடை யொன்பது முணர்ந்தவர் பத்தர்
பாடிநின் றடிதொழ மதனனை வெகுண்ட
கண்ணிடைக் கனலினர் கருதிய கோயில்
கழுமல நினையநம் வினைகரி சறுமே.

திருப்பிரமபுரம் - பண்-குறிஞ்சி 3.

(6) பரிமாணம்:—அதாவது அளவு. வியவகாரத்தின் அசாதாரண காரணம். அது நுண்மை (அணு), பெருமை (மகத்து), நெடுமை (நெடில்), குறுமை (குறில்) என நான்குவகையாகும். இதனை,

நுண்ணியான் மிகப்பெரியா
னோவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யானந்
தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே.

என்னும் சம்பந்தர் திருவாக்காலறிக.

பரிமாணம் நித்த அநித்த பேதத்தால் இருவகை. நித்தியத்தை அடைந்தது நித்தியம். காரியத்தை யடைந்தது அநித்தம்.

(7) பிரதக்துவம்:—அதாவது வேற்றுமை. கடத்தினின்று படம் வேறு என்பது இக்குணத்தின் தன்மையால்.

ஆலநிழ லிருப்ப ராகா சத்தர்
அருவரையி னுச்சியர் ஆணர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குச் சேயார்தாங் காணாதார்க்குக்
கோலம் பலவுடையார் கொல்லை யேற்றர்
கொடுமழுவர் கோழம்ப மேய வீசர்
ஏலமண நாறு மீங்கோய் நீங்கா
ரிடைமருது மேவி யிடங்கொண்டாரே.

திருவிடைமருதூர் - திருத்தாண்டகம் 3.

எல்லாம் வீணே?

ஒரு சிறு சரங்க நாடகம்

[590-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் அங்கம்

முதற் களம்

இடம்:—கோதண்டராம ஐயர் வீட்டின் சமையல் அறை

காலம்:—மாலை

நாரா:—மனிதனுடையயுக்திபெல்லாம் இவ்வளவுதான்; நாளைக்குப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு வருகிறார்களே, நான் என்ன பண்ணுவது!

[விசாலம் வருகிறாள்.]

அம்மா, விசாலம்மா, இங்கே வா அம்மா, உனக்குச் சமைக்கத் தெரியுமோ?

விசால:—ஓ, அம்மா கற்றுக்கொடுத்திருக்கிறாளே!

நாரா:—பின்னே, இரசம் எப்படிவைப்பது சொல்லு?

விசால:—தெரியாதோ, எனக்கு!

நாரா:—தெரிந்தால் சொல்லேன் பார்ப்போம்!

விசால:—புளியைக் கரைத்துக்கொண்டு கொதிக்க வைத்துப் பருப்பைக் கொட்டி இறக்கித் தாளித்துக் கொத்தமலி போட்டு......உப்பு.......

நாரா:—(ஒரு புறமாய்) இழவுதான். நான் இத்தனையும் ஞாபகம் வைத்திருந்து பண்ணிக் குட்டிச்சுவராய்ப் போனேன் போ!

விசால:—என்ன சொல்கிறாய்?

நாரா:—சொல்கிறாயே ஒழிய உனக்குத் திட்டம் தெரியாது என்கிறேன்.

விசால:—தெரியாதோ. இதோ பண்ணிக்காட்டுகிறேன் பார்......(கலக்கிறாள்)

நாரா:—(ஒரு புறமாய்) இரண்டு வேளை சாக்குப்போக்குச் சொல்லிச் சமைக்காமல் தப்பினேன். இப்பொழுது அகப்பட்டுக்கொண்டேனே. சாதம் என்னவோ ஒரு மாதிரி வடித்துக் கொட்டி இருக்கிறேன். கஞ்சி வடிந்த வேகத்தைப் பார்த்தால்—உள்ளே அப்படியே அரிசியாய் இருக்கிறதோ அல்லது சாதமே எல்லாம் வடிந்து வெறும் வெண்கலப்பானை தான் இருக்கிறதோ, ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம்—நல்ல வேளை, இரஸம் என்று பேர் வைத்து விசாலத்தின் புண்ணியத்தினால் ஏதோ ஒன்றை இறக்கிவைத்து விடலாம்—இந்த இழவு துவையலுக்கு என்ன பண்ணுவது! நாளைக்கோ வந்து விடுகிறார்கள். நான் எண்ணின காரியம் ஒன்றும் ஆகப் போவதில்லை. இப்பொழுது துணியை உதறித் தோளில் போட்டுக்கொண்டு நல்ல வேலைக்காரனுக்கு அடையாளமாய்ச் சொல்லிக்கொள்ளாமற் போய் விடுவதுதான் உத்தமம்.

விசால:—இதோ, பார்த்தாயா பண்ணிவிட்டேன்.

நாரா:—நீ சமத்து; இந்த அடுப்பையும் கொஞ்சம் எரியவிடு பார்ப்போம். நீ புக்ககத்திற்குப் போனால் நல்ல சமத்தென்று பேரெடுப்பாய்.

விசால:—(அடுப்பை ஊதிக்கொண்டே) நீ என்ன பாலக்காட்டான் என்றாய், தமிழ் தெரியாதென்றாய். இதோ நன்றாய்ப் பேசுகிறாயே!

[நாராயணன் கையைக் கடித்து உதறிக்கொள்கிறான் விசாலம் பார்த்துவிடுகிறாள்.]

ஐயயோ, சமைக்கும்போது எச்சில் பண்ணுகிறாயே

நாரா:—இருக்கட்டும். அம்மாள் எங்கே? கோவிலுக்குப் போயிருக்கிறாளா? விசாலம், என்னைத் தெரியவில்லையா உனக்கு?

விசால:—இப்பொழுது நிச்சயமாயிற்று. நீங்கள் காலேஜில் படிக்கிறீர்கள் என்றல்லவோ சொன்னார்கள். எதற்குப் பொய்!

நாரா:—பொய்யில்லை, நிஜமாய்ப் படிக்கிறேன். இப்பொழுது லீவல்லவா?

விசால:—லீவிற்கு லீவு எல்லாரும் சமைக்கப்போவது வழக்கமா? எதற்காக இந்த வேலை?

நாரா:—உனக்காக—விசாலம் நீ......

மீனாக்ஷி:—(உள்ளே) கிருஷ்ணா, கிருஷ்ணா, விசாலம், அடி விசாலம்; (வருகிறாள்) எங்கே ஒருவரையும் காணோம். வாசலெல்லாம் திறந்துபோட்டுக் கிடக்கிறதே.

நாரா:—விசாலம், நான் இந்த வழியாய் ஓடியே விடுகிறேன். நான் எங்கே என்று கேட்டால், சாயந்திரம் முதல் காணவில்லை என்று சொல்லிவிடு.

(போய்விடுகிறான்)

[மீனாக்ஷி வருகிறாள்.]

விசால:—அந்தக் கிருஷ்ணனைச் சாயந்திரம் முதல் காணோமே. அதற்குத்தான் நான் சமைக்கிறேன்.

(சீனுவாசமூர்த்தி வருகிறான்)

அண்ணா, கிருஷ்ணனை எங்கேயாவது வழியில் பார்த்தாயோ. அவனைத் திடீரென்று காணோமே.

மீனாக்ஷி:—வாயில்கதவை எதற்காக இப்படித் திறந்து வைத்திருந்தாய்.

சீனு:—அவனென்ன, நாயா, கதவைத்திறந்தால் ஓடிப் போய்விட? வெகு அழகு! எதையாவது தூக்கிக் கொண்டு போய்விட்டானோ?

[கோதண்டராம ஐயர் வருகிறார்.]

மீனாக்ஷி:—இந்தப் பையன் கிருஷ்ணனைக் காணவில்லை. திடீரென்று போனதைப் பார்த்தால் எதையாவது தூக்கிக்கொண்டு போயிருப்பானோ வென்று மூர்த்தி பயப்படுகிறான்-இருங்கள் வெள்ளிப் பாத்திரங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். (போகிறாள்)

கோதண்:—இந்த "இது"க்குத்தான் இவர்களை எல்லாம் "இது" பண்ணவேண்டாமென்றேன். யாராவது கேட்டால்தானே.

[மீனாக்ஷி வருகிறாள்.]

மீனாக்ஷி:—எல்லாம் இருக்கிறது. ஆனால் வெள்ளிக் கூஜாவைக் காணோமே.

கோதண்:—எனக்குத் தெரியுமே. இந்தப் படவாப் பசங்களெல்லாம் இப்படித்தான். மூர்த்தி, உடனே 'டாணா' விற்குப்போய் அவன் அங்க அடையாளங்களெல்லாம் எழுதிவை. இந்த மதுரைப் பட்டணத்திற்குள்தானே இருப்பான், எப்படியும் பிடித்துவிடுவார்கள்.

மீனாக்ஷி:—என்னதான் இருந்தாலும் இப்படித்தான் பண்ணுவனோ!

கோதண்:—ஆமாம், நாளைக்குச் சம்மந்திகள் வரப் போகிறார்களென்று பெருமையாய் வெள்ளிப் பாத்திரங்களை வெளியில் எடுக்காமற் போனால் என்ன. கிடக்கட்டும்; மூர்த்தி, 'டாணா' விற்குப் போய்க் கிருஷ்ணனுடைய அங்க அடையாளங்களுடன் 'இது' பண்ணிவிட்டு வா.

(கோதண்டராம ஐயர் போகிறார்.)

மீனாக்ஷி:—எப்படியும் அகப்படும்; அகப்படாமற் போகாது. ஒன்றா, இரண்டா, எட்டு சேராயிற்றே. இப்பொழுது வெள்ளி விற்கிற விலைக்கு—

விசாலம்:—இதென்ன. அவன் திருடியிருக்க மாட்டானம்மா. அவனைப் பார்த்தால் திருடன் மாதிரி இல்லவே இல்லை. அவன் திருடவே இல்லை என்று நான் பாம்புக் குடத்தில் கையிடுவேன்.

சீனு:—உனக்கு என்ன தெரியும்! அவன்தான் எடுத்திருக்கிறான். என்ன பந்தயம்?

விசால:—எனக்குத் தெரிந்தபடியினால்தான் சொல்கிறேன். என்ன வேணுமானாலும் பந்தயம்.

சீனு:—எடுத்திருந்தால் அவனை நீயே கலியாணம் பண்ணிக் கொள்ளவேண்டும் பார்.

விசால:-சரி. அப்படியே. ஆனால், எடுக்காவிட்டாலோ?

சீனு:—நானே பண்ணிவைக்கிறேன்.

(எல்லாரும் போகிறார்கள்)

பொதிகை நிகண்டு

199145

[596-வது பக்கத் தொடர்ச்சி]

மூன்றாவது-விலங்கின் பெயர்த் தொகுதி

மாப்புலி கராளியரி மாவயப்போத் தறுகு
மடங்கல்கே சரிகா யுதமிருக ராசன்
கோப்பின்விலங் கரசுகண்டீ ரவமாளி சீயங்
கோளரியை முகன்பஞ்சா னனம்பூட்கை வயமா
திப்பொறிநோ முடங்குளையே வயப்புலி மூவேழும்
சிங்கப்பே ராம்பூட்கை வாளமே யாளி
காப்பறுகும் யானையா ளிப்பேராங் காட்டாக்
கவையமா வாமாவென் றியம்பினர் வல்லவரே. 113.

வல்லியம்வன் மாவேங்கை நீவி புண்டரீகம்
வயவரிசித் திரகாயஞ் சாத்தூலம் வயமாப்
புல்லுழுவை மிருகாரி கொடுவரி வியாளம்
புலிதரக்குக் குயவரி வியாக்கிரம் வியாழி
யொல்லு*வட்ட மிருபான்பேர் பல்லமெலுக் கரடி
யுளியமே கவிழ்தலை குடாவடியெண் கிருளி
டல்லுகமே தலைவிரியு மாமதன்பேர் கிருச்சம்
பாய்ந்தசச முயன்மூன்று முசநீபோர் தனரே. 114.

தந்திபோ தகங்கயங் கராத்திரி வல்விலங்கு
சாமோற் பவம்பகடு வழுவையிபங் கடிவை
மந்தகுணி மந்தமாக் கோட்டிகரி கருணி
மருண்மாக்குஞ் சரம்பூட்கை மாதங்க நால்வாய்
சிந்துர மதாவளங்கைம் மாக்களிறு கும்பி
சிறுகணி தந்தாவள முவாத்தும்பி வேழ
முந்திரதி தூங்கல்கறை யடிபுழைக்கை வயமா
வொருத்தலே ரம்பமத கிறிபெறும்பி யுடனே. 115.

உடற்றுபுகர் முகங்களப நாகமத திப
மும்பலத்தி கோட்டுமா மாதிரத்தோ லாம்பல்
நடைக்கிரிக ரேணுவா ரணங்களவ னேழேழ்
நான்கானைப் பொதுப்பேரத் தினிகருணி வடவை
பிடிப்பேர் கரேணுவுமா மதகயத்தோற் கடமாம்
பேர்யூப நாதனே யரசுவா வின்பேர்
துடர்க்களபங் கயமுனியே கயத்தலை போதகமுக்
துடியடியும் யானைபெறுங் கன்றதின்பேர் தானே. 116.

தானமதா கடங்கடாங் கம்பமதப் பேராக்
தாலுமத கங்குடமத் தகங்கும்ப மாகும் [டையுமா
யானையின்கை துதிக்கைதொண் டுகொண்டலக் தொண்
மதின் கரடம்†கோடிணரி கவுளு மதச்சுவடா
மானமொடு பிருதுகொம்பு நடுவொம்புட் கரமே
மதக்கைநுனி யாமெயிறு கோடுதந்த மருப்போ
டேனயில்கொம் பாம்பூண்கிம் புரியாகும் பட்ட
மோடையாஞ் செவியடிசூழிகைகதுப்பாங் கடமே 117.

சடைக்கணிரி யாணமாம் பல்லடி கரீரங்
காங்கியும்புட் கரமுமாங் கைநீர் விலாழி
தடுக்குமுன்கா லங்கிதங்காந் திரம்பின்கா லாரக்
தாலவட்டம் வால்வாலி னுனியேவே சகமாம்
படுத்தமுது கேமஞ்சா மதிஞெய்பா கலமாம்
படுகுழிப்பேர் பயம்புகொப்பம் வாரியாங் கூட்டம்
மடிக்கடக மாந்துயிலு மிடமே சேவகமா
மதின்கூடப் பேரோளி வாரி யாலையமே. 118.

ஆலநிகர் தூசியிக் தவங்கவணி யிவுளி
யத்திரிகந் திருவமரி கோடையுன்னி பாய்மா
வாலியயக் துரகதம்பா டலம்பரிமண் டிலமா
வாசிகொக்கச் சுவஞ்சடிலங் கனவட்டம் வாகங்
கோலவய மாத்துரங்கங் கிள்ளைகுர கதமே
கோடகம்பத் திரிகுந்தங் கொய்யுளையே கோரங்
தூலமுறு மட்டம்வே தோற்பவம்வா ரிசமே
துரகமா திகங்கற்கி சத்தியமண் டசமே. 119.

அண்டமர்க்கந் துகம்புரவி கோணங்கோ டரமென்
றேழு மிரண்டுமே குதிரைப்பே ரெனலாம்
மண்டுகுரங் குரச்சைகுளம் பின்பேர் விலாழி
வாய்நீராஞ் சுவல்குசைவே சகமுங் கேசரிப்பேர்
கொண்டநடை வீதியதா மந்திரமே சாலை
குதிரைநிற்கும் பந்தியின்பே ராதிக மாதிகமே
தண்டுபரி மாற்க மதாம் வானர மயூரஞ்
சரஞ்சசமே மல்லமெனச் சாற்றிடுமைங் கதியே. 120.

கதிசரபி தொறுத்தேனுக் கபிலையாக் குடங்கோக்
காலிநிரை யான்குரங்கோ மாம்பெற்றஞ் சேதாச்
சுதைபதினொ் தாம்பசுவின் பேர்கபிலை தேனுச்
சுரபிதெய்வப் பசுவாகுங் காலிதொறுக் கோட்டஞ்
சிதனிரை காலேயம் பசுக்கூட்ட மைந்தாஞ்
செருத்தன்மடிச் சுரையின்பை பீனசமு முலைப்பேர்
செதிகுட்டி பத்திரைவற் சலமீன லீற்ற
மலடுவற்சை யாந்தன்னம் வற்சமுங்கன் றுயே. 121.

கன்றுத நரையிறால் சேப்புல்லம் பூணி
காளைகுண்டை விடைபாண்டில் புங்கவங்கோப் பதி [யான்
குன்றுத தூர்வகமே றிடபாந்தி கூளி
குத்தக்கு ரியம்பாதல் கொட்டியமே மூரி

---

* பத்தொன்பான் பெயராம் (பி-ம்)

† கொடிறிணரி (பி-ம்)

சென்றேடும் பகடுபெற்ற மெருதுநா லாறுர்
திமிலிமிலக் கேழுரிப்பாங் கார்மூரி மேதி
மன்றுருங் கவரிகா சாமயிடங் கவைத்தாள்
வடவைசவு ரியங்காரா னெருமையின்பேர் பகடே.122.

பகடுமயி டங்கிடா வின்பேர்மை மலடாம்
பள்ளைமறி யொருத்துருவை யயமேடம் வருடை
தகருணு‡மே ழகந்தண் ணகங்கிடாய் வெள்ளை
சகஞ்சாக முதள்கார்வற் காலிதுள்ளன் மோத்தை
புகழ்புருவை செச்சைமேட கங்கொச்சை யசமை
யுடுத்துருக்கம் பளம்வெறியே ழகங்கொறியாட் டின்
அகழ்சரபம் வருடைவரை யாட்டின்பேர் சோர [பேர்
ணணங்குகுட்டன் மறிபறளுங் குட்டியின்பேர் கருதே.

கருமாவல் லுளிகோல மைமாக்கு ரோட்டுக்
களிறுபோழ் மாக்கனலி கோணிவன்றி கான்மா
விருளிபூ தாமுர்துழ் போத்திரி வராக
மெறுளிகு கரமோழ லிரணிகிடி கிருட்டி
யரியேனங் கோட்டுமாக் கிருகிடிகே ழலுமே
யடும்பன்றி காலேழ்பேர் சல்லமுண்மா முளவு
தரிசலஞ்சல் வியஞ்சல்லி யெய்முள்ளஞ் சலவஞ்
சல்லவமுட் பன்றியதின் முட்சல்லஞ் சலமே. 124.

சலிப்பில்சீ கரஞ்சவரஞ் சமரியன்ன மெகினம்
சவரிமாக் கவரிமா மானமாப் பட்டம்
வலிப்பின்மரை சாமரைப்பே ராவிதங்கான் குதிரை
மரையாகு மருணமறி யுழையேணன் குனன்
குலைப்பில்பிணை சாரங்க மிரலைநவ்வி மிருகங்
குரங்கமே வற்சையமான் பன்னிரண்டாங் கருமான்
கலைப்பேராங் கலையிரலை வற்சையம்புல் வாயாம்
கத்திரங்காத் திரங்கீரி நகிலன்றீர் வையுமே. 125.

வயமுறுமத் திரிகோகு கரங்காள வாயே
வாலேபங் கருத்தவம்வே சரிகழுதைப் பேரா
மியலுறுகோ வேறுகழு தைப்பேர்வே சரியா
மிரவணர்தா சோகநெடுங் கழுத்தல்கன கதமே
யுயருறுமத் திரிகரப மொட்டகத்தின் பேரா
முக்குரோட் டோரிகோ மாயுவொண்ட னிகல
னயருள்ளான்$றாங்கிசம்பு சிருகாலன் சுண்ட
ஞக்கினிகி தம்பூரி மாவோடி நரியே. 126.

சரமிருகம் பிலவங்க மந்திகவி வாலி
நகையிவா னரஞ்சாகா மிருகங்கோ டரமே
யரிகடுவன் யூகங்கா னவிஞேத ஞக
மாடும்வலி முகமதிச்சங் கீசகமற் கடமே
யுரீரந்தங் கோகிலங்கா னவன்மூவேழ் குரங்காம்
யூகங்கா ருகமிரண்டுங் கருங்குரங்கா மோரி
கரிமுகன்கோ லாங்கூலங் கலைகூலங் கடுவன்
கள்வனே மைம்முகமெட் டாமுசுவென் றேதே. 127.

ஓதிவிட ருகங்கடுவென் வெருகலவன் பூனை
யொண்பூசை மார்ச்சாலன் மண்டலி விலாளம்
பாதகஞ்செ யெலிப்பகையிற் புலிபவணம் பாக்கன்
பதினுலும் பூனையின்பேர் மிருகமத நரந்த
மாதுருக்க நானமான் மதமெனும்பே ரைந்து
மருவளர்கஸ் தூரியின்பேர் மறுவிமறி நாவி
மோதியபேர் மூன்றுபுழு குப்பூனைப் பேரா
முசலிகோ தாவுடும்பின் பேர்தடியு மாமே. 128.

தடுஞமலி கீழ்ச்சென்னி பற்காட்டி நாக்கி
சாரமே யன்பட்டி குக்கல்குரை முகனே
முடுவல்கூ ரன்சுணங்கன் ஞாளியக்கன் சூரன்
முடுகெகினம் பாசிசுன கஞ்சுவாச் சுகினம்
விடுபுரோ கதியிருபா ஞயின்பேர் கொக்கும்
விருகமுஞ்செந் நாயின் பேர் மூஞ்சூறுச் சுண்ட
னடு சூறன் சுந்தரியுஞ் சுவவுமா முறுத்தை
யணிற்பேராம் வெளிலும்வரிப் புறமுமாந் திருவே. 129.

திருகல்சாய் சுதங்காம ரூபிகா முருகி
சிகிப்பகைதண் டாசமோ *ஞேஞேந்தி யோதி
சரடஞ்சா யனங்கோம்பி முசலியோந் தியின்பேர்
சார்கருப்பை யாகிரும்பன் சிகரியெலி வகுப்பாங்
கருவிருட மூடிகமா கிருந்துருத்துந் தளமே
கனகதமும் பெருச்சாளிப் பேர்குரங்கு மாமான்
மிருகம்விலங் கின்பொதுப்போர் கணங்குலம் வியூகம்
விருந்தஞ்சா லங்கூட்டம் யூகஞ்சே கரமே. 130.

‡ மேழகத்திண் (பி-ம்)

$ மாங்கிசம்பு (பி-ம்)

* ஞேஞேத்தி (பி-ம்)

வொர்ட்ஸ்வொர்த்

William Wordsworth

வோர்ட்ஸ்வோர்த் என்னும் ஆங்கிலகவி இங்கிலாந்தில் 1770-ம் வருஷம் ஏப்ரல் மாதம் பிறந்தார். முதல் முதலாக, அவர் ஆக்ஸ்ஹெட் கிராமர் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றார். 1787-ம் வருஷம் கேம்பிரிட்ஜ் செயிண்டு ஜான்ஸ் கல்லூரியிற் சேர்ந்து கல்வி பயின்றார். 1791-ம் வருஷம் சிறப்பொன்றுமின்றி எல்லா மாணவரையும் போல் கல்லூரிப்பட்டம் பெற்றார். அதே வருஷம் பிரஞ்சுப் புரட்சி விஷயங்களில் அவர் அதிக ஊக்கமும் கவலையும் கொண்டு பிரான்ஸ் தேசம் சென்றார். பிரான்ஸில் ஆர்லியன்ஸ் பிளாயிஸ் என்ற பிரதேசங்களில் ஒரு வருஷம் காலங்கழித்தார்.

அப்பிரதேசங்களில் வசித்திருந்த காலத்தில் அவர் ஒரு பிரஞ்சு மாதினிடம் காதல் கொண்டார். அந்த மாதுக்கும் அவருக்கும் ஒரு குழந்தை பிறந்தது.

சிறிது காலங்கழித்து அவர் இங்கிலாந்து திரும்பினார். 1793-ம், வருஷம் "சாயங்காலம் உலாவுதல்", "சில வருணனைகள்" முதலிய பாட்டுப்புத்தகங்களை இயற்றிப் பிரசுரஞ் செய்தார். இச்சமயத்தில் அவரது புரட்சியைப்பற்றிய கொள்கைகளெல்லாம் ஆட ஆரம்பித்தன. ஏனெனில் நெப்போலியனது ஆதிக்கம் அதிகரித்ததுமன்றியும், ஏகாதிபத்தியத்தின்பொருட்டு நெப்போலியன் அதிகதீவிரமான முயற்சிகள் செய்தது பற்றி அவன் ஆட்சியில் ஜனங்கள் அதிக முற்போக்கு அடைந்துவந்தனர்.

1795-ம் வருஷம்முதல் ஓர்ட்ஸ்வொர்த்துக்கு 900 பவுன் வருடாந்தர வரும்படி கிடைத்தது. பிறகு அவர் தன் சகோதரியுடன் டார்ஸட் ஷயரில் வசித்து வந்தார். 1797-ம் வருஷம் அவர் அல்பாக்ஸ்டன் சென்று வசித்துவந்தார். அங்கே கோல்ரிட்ஜ் என்ற கவியின் நட்பைப்பெற்றார். 1798-ம் வருஷம் அவர்களிருவரும் பிரிஸ்டல் நகரில் "லிரிகல் பாலட்ஸ்" என்ற பாக்களைப் பிரசுரஞ்செய்தார்கள்.

பிறகு ஓர்ட்ஸ்வொர்த்தும், அவரது சகோதரியும் லேக் டிஸ்டிரிக்டில் வசித்துவந்தார்கள். 1802-ம் வருஷம் மேரி ஹட்சின்ஸன் என்ற வோர் பெண்ணை மணந்தார்.

அதுமுதல் அவர் தனது பாக்களைப் பிரசுரித்து வந்தார். நாளடைவில்தான் ஓர்ட்ஸ்வொர்த் மிகுந்த புகழும் கீர்த்தியும் பெருமையும் பெற்றார்.

அவரது பிற்கால வாழ்க்கையில் அவருக்குக் கலாசாலைப்பட்டங்கள் அதிகமாக அளிக்கப்பட்டன. சிவில் ஜாபிதாவில் பென்ஷனும் அவருக்கு அதிகமாக அளிக்கப்பட்டது. எழுபத்து மூன்றும் வயதில் ராபர்ட் சதேய்க்குப் பின் ஓர்ட்ஸ்வொர்த் இங்கிலாந்தின் ஆத்தானகவிப் பதவியைப் பெற்றார்.

ஓர்ட்ஸ்வொர்த் தமது கவிகளின் வாயிலாக உயர்ந்த நீதிபோதனைகளையும், தத்துவங்களையும், ஆன்ம உணர்ச்சியையும், மனச்சாக்ஷியின்படி வாழ்க்கையை நடாத்துவதால் விளையும் ஆனந்தம் இன்பம் முதலியவைகளைப் பற்றியும் போதிக்கிறார். சில உதாரணங்கள் ஈண்டுக்கூறுவாம். அவர் ஒரு பாட்டில், "நான் படுத்துக்கொண்டு ஆனந்த சிந்தனையிலிருக்கும்போது எனது இருதயத்தில் சந்தோஷம் நிரம்புகிறது. மேலும் என்னிருதயம் டெபோடில்ஸ் என்ற பூஞ்செடிகளுடன் ஆனந்தமாக நடனஞ்செய்கின்றது" என்று கூறுகிறார். 'சங்கீதம்' என்ற பாட்டில் அவர், மரம் முழுவதையும் காற்றானது எப்படிச் சலசல என அசைக்கின்றதோ, அஃதேபோல் ஒருவனது ஆகம்முழுவதும் சங்கீதம் பரிணமிக்கிறது, என மொழிகிறார். லயேட்டமியா என்ற பாட்டில் நல்லொழுக்கத்தைப் பற்றிப்பேசுங்காலை, அச்சமில்லாத நல்லொழுக்கம் அளவற்ற இலாபத்தைக் கொண்டுவருகின்றது என்று வலியுறுத்துகின்றார். நல்லொழுக்கமே அதனதுபரிசாகும் என்ற ஆங்கிலப் பழமொழி ஈண்டுக் கவனிக்கத் தக்கது. காதலைப்பற்றி ஓர்ட்ஸ்வொர்த் பேசுங்காலை "காதலால் ஒரு உயரிய வஸ்துவை, அல்லது இலட்சியத்தை அடைய முயல வேண்டும். காதல் அந்தப் பெரிய நிலையை அடையவே கொடுக்கப்பட்டது, அனுமதிக்கப்பட்டது, ஊக்கப்பட்டது. அதற்காகவே இவ்வுயரிய உணர்ச்சி அதிகரிக்க வேண்டும். ஏனெனில் நமது அனுத்மா அல்லது தேகத்தினை லுதிக்கும் உபாதிகளும், பீடைகளும் அழிந்து ஒழிந்து தேய்ந்து குறைந்துபோக, ஆன்மவொளி அதிகமாகும். ஆகலால் நான் தேகத்திற்கு அடிமை என்ற கனு பொய்படும். கனவினில் இட்டதளைகள்போல நமது பற்றுக்கள் அற்று மாயமாய் மறைந்துபோம்; எனவே உண்மையான காதல் தேகத்தைப் பற்றியது அன்று. அதாவது வெறும் சிற்றின்பமன்று", என்று சாற்றுகின்றார். ஓர்ட்ஸ்வொர்த் என்னும் இவ்வித்தகர் மனிதரது கடமைகளைப் பற்றிப் பின்வருமாறு பேசுகிறார். மில்டனைப் பற்றி அவர் எழுதிய பாட்டில் "உன்னிருதயம் மிகத் தாழ்மையான கடமைகளிலும் சென்று அவைகளின் பாரத்தைச் சுமந்திருந்தது" என்று சாற்றுகிறார். கடமை என்ற பாட்டில் அவர், "பிறர் நலங்கருதித் தொண்டாற்றும் சிறந்த புத்தி எனக்கு வாட்டும். அதனால் நான் தாழ்ந்த அந்தஸ்திலிருந்தபோதிலும் அறிவும், விவேகமும் பகுத்தறிவினாலுண்டான தன்னம்பிக்கையும் உண்டாகும். நான் உண்மையாகிய ஒளியில், உனது அடிமையாகச் சேவிக்க அனுமதி அளி" என்று ஏக்கமுறுகின்றார்.

கடவுளைப்பற்றி ஓர்ட்ஸ்வொர்த் கீழ்வரும் அருமையான வார்த்தைகளால் நமது கன்மன முருகுமாறு வருணிக்கிறார்." சிற்பிகளின் அரசரான எல்லாம் வல்ல இறைவன் இவ்வுலகங்களை எல்லாம் செய்துள்ளார். மனிதரால் செய்யப்பட்ட வித்தைபோலவே, இந்தப் பெரிய உலகங்களை இயங்கச் செய்கின்றார்" என்பர். ஓர்ட்ஸ்வொர்த், மரணமற்ற வாழ்வைப்பற்றிய வோர் குறிப்பில், 'நமது பிறப்புத் தூக்கத்தைப் போன்றது; நமது ஆன்மா வேறொரு பிரதேசத்திலிருந்து வருகிறது;' பாலபருவத்தில் நாம் மோக்ஷத்திற் கருகிலிருக்கிறோம்" என்று பலபடக்கூறுகின்றார். "எக்ஸ்கர்ஷன்" என்ற பாட்டில் அவர் தமது ஆன்மாவினின்று உதிக்கும் ஒவ்வொரு ஒழுக்க உணர்ச்சியும் என்றும் நல்ல நெறியே நாடுகின்ற தென்பதுபற்றிப் பெருமையாய்ப் புகழுகின்றார். அவர் தனது சகோதரியைக் குறித்து எழுதிய ஒரு புகழ்மாலையில் காதலைப்பற்றி வருணிக்கும்போது, "காதல் உலகமுழுவதும், வியாபித்துப் பரவுகின்றதொன்று. உலகத்திலுள்ள ஒரு பாகத்திலிருந்து மற்றொருபாகத்திற்குக் காதல் பரிணமிக்கிறது. உலகத்திலிருந்து மனிதனுக்கும், மனிதனிடமிருந்து உலகத்திற்கும் காதல் பரவுகின்றது. பல வருடங்கள் உழைப்பதா லுண்டாகும் பயனைவிட நமக்கு அதிக பயனளிக்கும் நேரம் இக்காதல் உதிக்கும் ஒருகணந்தான். இப் பருவகாலத்தில் நம் உள்உணர்ச்சியை ஒவ்வொரு சிறுதுவாரத்திலும் நமது மனம் பருகுகின்றது. நமது இருதயங்கள் மௌனமான சில விதிகளைச் செய்துகொள்கின்றன. அவ்விதிகளுக்கு நெடுங்காலம் அவை கீழ்ப்படிந்து நடக்கும். நாம் வருகின்ற வருஷங்களுக்கு இன்றிருந்தே நமது குணத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ளலாம். கடவுளாலளிக்கப்பட்ட இந்த ஆதிக்கம் நம்மைச்சுற்றிலும் கீழும் மேலும், உருண்டுசெல்கிறது. நமது ஆன்மாக்களின் அளவை நாம் திட்டப்படுத்திக்கொள்ளலாம். அவைகள் விதிகளாக மாறும்' என்று இயம்புகின்றார். மற்றொரு இடத்தில் இக்கவிவரர் ஓர்ட்ஸ்வொர்த் 'காதலிப்பதுதான் வாழ்க்கைக்குச் சுகத்தை அளிப்பதாகும்" எனக் கூறுகிறார். "எல்லா வஸ்துக்களும் ஒன்றில் மற்றொன்று ஒரு தெய்வீகமான விதியின் வண்ணம் கலக்கின்றன' என்று ஷெல்லியும் கூறிய கூற்றை முந்திய இதழில் கண்டுள்ளோம். அவ்விதியையும், அப்பொருளையும் ஓர்ட்ஸ்வொர்த்தும் ஈண்டு வலியுறுத்துகின்றார். ஓர்ட்ஸ்வொர்த் ரத் என்ற பாட்டில் "அவரது, அறிவும் அவரது ஒழுக்க நிறைவும் கெட்டுவிட்டன. அவர் கீழ்மையான ஆசைகளுக்கு அடிமையாயினர். தன்னைத் தான் அடக்கி ஆளும் திறமையும், அறிவும் இல்லாத ஒருவன், கீழ்ப்படிகளிலிழியும் ஆன்மா அறிவீனமாக யாதொரு விஷயத்தைப் பாராட்டுகிறதோ, அதையே நாடுவான்" என்று தன்னைத்தான் அடக்கி ஆளுதல் வேண்டுமென்று அறிவுறுத்துகின்றார். சகோதரத்துவத்தைப்பற்றிப் பேசுங்காலை அவர், "நாமெல்லாம் ஒரு தகப்பனரின் நித்தியமான மக்கள்' என்று இயம்புகின்றார். ஓர்ட்ஸ்வொர்த் ஒரு இயற்கை கவி. "என்னிருதயம், நான் வானத்தில் வானவில்லைக் கண்ட காலங்களில் உற்சாகத்துடனும் சந்தோஷத்துடனும் பாய்கிறது" என்ற அவர் வாசகத்தை ஈண்டு நோக்குக. "டேபின்ஸ் டர்ண்ட்" என்ற பாட்டில், அவர் "இயற்கையே உனது உபாத்தியாயாயிருக்கட்டும்; இயற்கை அன்னையிடத்

தில் சதா உலகளவு நிறைந்த நிதிகள் இருக்கின்றன. ஒரு நந்தவனம் அல்லது காட்டிலிருந்து வரும் ஒரு எண்ணமே, அல்லது கருத்தே உனக்கு மனிதனைப் பற்றி இன்னம் அனேக விஷயங்கள் கற்பிக்கவல்லது. மேலும் அக்கருத்தே நீதியும் ஒழுக்கமும் வாய்ந்த நன்மையையும் அஃதில்லாத் தீமையையும் பகுத்தறிந்து கூறவல்லது. நமது கலக்கமுள்ள அறிவு வஸ்துக்களின் உருவங்களைப் பாழ்படுத்தி விடுகின்றது. நாம் வஸ்துக்களைப்பற்றி விஞ்ஞான முறையே ஆராய்ச்சி செய்ய அவைகளைக் கொன்று அழித்து விடுகிறோம்" என்பர். இதனால் ஓர்ட்ஸ்வொர்த் விஞ்ஞானிகளின் உணர்ச்சியற்ற இருதயத்தையும், மனதையும், கண்டிக்கிறார். அறிவுடன், உயரிய ஆன்ம உருக்கமும், ஆன்ம உணர்ச்சியும் கலக்கவேண்டு மென்று அவர் வலியுறுத்துகிறார். பிறிதோரிடத்தில், அவர் "அப்பெரிய உணர்ச்சியின் பலத்தைக் கொடுத்தது. அவ்வுணர்ச்சி மனிதரால் மதிப்பிடப்பாலதன்று" என்று கூறுகிறார். ஓர்டஸ்வொர்த்தின் கவிகளை நாம் படிக்கும்போது, நமது வாழ்க்கையின் அனுபவங்களே நம் கண்முன் மிளிர்கின்றன. அவரது கவிகள் எல்லாம் நமது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகப் பொலிகின்றன; எனவே அவை நமது உறுப்புக்களைப் போன்றன எனல் மிகையன்று. அவர் சுயேச்சையைப் போற்றுகின்றார்; அடக்குமுறைகளை மிகக் கண்டிக்கின்றார்; உலகத்திற்கும் தனக்கும் சுதந்திரத்தை விரும்புகிறார். ஓர்ட்ஸ்வொர்த் ஷெல்லியை விடச் சிறந்த தத்துவ ஞானி; தன்னைத் தானறிந்தவர்; சீரிய ஒழுக்கமுடையவர்; எனினும் ஷெல்லியின் கவிகள் மிகுந்த இன்னோசையும் இசையும் உடையன; இருவரும் இயற்கைக் கவிகளே. இருவரும் ஒரே விதமான கொள்கைகளை யுடையவர்கள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[594-வது பக்கத் தொடர்ச்சி]

கவிதை நீதியைக் கடப்ப தில்லையே.

படைத்தலைவ ருடைந்தனர், திரிசிரன் முரிந்தனன், தூடணனும் வீடினன்; இனிப் பெருந்திறற் கரனே படுகளம் வருகின்றான். வந்து தன் அரக்கர் பெரும்படையுடன், தனிநின்ற தருமத்தி னுருவத்தை வளைந்துகொண்டனன். மற்றென், பண்டேபோல்,

அன்றிடை வளைந்தவர் குலங்களொ டடங்கச்
சென்றலை வுறும்படி தெரிந்துகணை சிந்த
மன்றிடை நலிந்துவலி யோர்களெளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்தபொரு ளிற்கடிது கொன்ற

[அப்பொழுது, தன்னைச் சூழ்ந்துகொண்ட அரக்கர்கள் எல்லோரும் குலத்துடனே அழிந்துபோம்படி இராமன் அம்புகளை ஆராய்ந்து எய்ய, அவ்வம்புகள், வலியவர்கள் எளியவர்களை நியாயமன்றத்தில் கொல்லாத குறையாய்த் துன்புறுத்திக் கவர்ந்து அனுபவித்த பொருள் அவ்வலியோரை அழிப்பதுபோல, அரக்கரைக் குலத்தோடும் விரைவில் கொன்றழித்தன]

முன், இராமபாணம், அரக்கர்க்கு, பொய்க்கரி கூறியவர் கொடுஞ்சொற் போன்றதாயின், இப்பொழுது, அப்பொய்க்கரி முதலிய சாதனங்களால் கவர்ந்து நுகர்ந்த பொருளெனல் ஆயிற்று. இன்னணம் இராமன்றன் செஞ்சரங்கள் இழைக்கின்ற அழிவினைக்கண்ட கரன், நேரிய போரிலே இராமனை வெல்லல் ஒன்றும் ஒல்லாதென நினைந்து,

கள்ளவமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளலுரு வைப்பகழி மாரியின் மறைத்தான்
உள்ளமுலை வுற்றமா ரோடின ரொளித்தார்
வெள்ளெயி றிதழ்ப்பவள வீரனும் வெகுண்டான்

[கரன் தான் கற்றிருந்த மாயவினைகளைக்கொண்டு கள்ளப்போர் செய்யத் தலைப்பட்டானாகி, இராமனது உருவை அம்புமழையால் மறைத்தான். அது கண்டு மனங்கலங்கிய தேவர்கள் ஓடி ஒளிந்துகொண்டனர்; வெண்மையான பற்களையும் பவளம்போன்ற உதடுகளையுமுடைய வீரனான இராமனும் கோபங்கொண்டான்]

இப்போர்க்களத்தில் இராமன் கோபங்கொண்டது கம்பர் நூலில் இவ்வொரு முறையே. தெரிந்து செய்யுங் கொடுமைகளை முனியாது முன்னின்று விலக்குவாரும், மறைந்திழைக்கும் வஞ்சனைகளுக்கு வெகுளாதிருத்தல் அருமை. வெகுளி என்பது எஞ்ஞான்றும் வழுவுடைத்தாயினும், வஞ்சனைக்கே வெகுண்டனன் இராமன் என அவ்வழுவிற்கோர் அமைதியுங் கம்பர் காட்டினார். வெகுளி என்பது எஞ்ஞான்றும் எந்நிலையினும் கொள்ளாமை கோடிபெறும். எனினும், கொண்டாலும், கொள்வதற்கமைந்த காரணம்பற்றி ஏற்றமுந் தாழ்வும் ஒருவாறு வெகுளியின் திறத்தில் எடுத்துக் கூறலாம். தனக்குப் பிறனொருவன் இழைத்ததீங்கினை நினைத்து வெகுள்பவன் விலங்குநிலையினின்று உயராத சாதாரணமனிதன். உலகிலெங்கும் உழல்கின்ற சீற்றத்தின் இலக்கணம் இது. தனக்கிழைத்த தீங்கைத் தண்மையுடன் பொறுத்தாலும், ஒருவன் மற்றொருவனுக்குச்செய்ததீமையைக்காணப்பொறாமல்பொங்குகின்ற வெஞ்சினம் பூண்டிருத்தல் பெருந்தகை மக்களுக்கு ஒருவாறு அணிகலம் போன்றதே. இலக்குவன் இந்நிலையில் இருப்பவன். தன் முன்னோனுக்குக் கொடுமை செய்தாள் கைகேசியென, "பெண்ணுணட்டமொட்டேன் இனி இப் பேருலகத்திலே" என்று முனிவின் உருவமாய் நின்ற இவ்விளங்கோ, மாரீசன் மாயத்தை உணராமற் றன்னை அடாதன சொல்லி நிந்தித்த சீதையைச் சிறிதுஞ்சினவாமல் அடிபணிந்திறைஞ்சிய செம்மையே இதற்குச் சான்று *. இதனினும் உயர்ந்தோர் வெகுளி, இடத்தினால் மாத்திரமன்றிப் பண்பினாலும் வேறுபடும். செய்யப்படுபவனைப்பற்றிச் சிந்தியாமல் தீமை செய்பவனையே குறித்து, "இக்கொடியோன் ஏன் இதுசெய்து கெடுகின்றான்" எனச் சினவுதல் இது. தோற்றத்தால் சீற்றம்போல் தோன்றினாலும் உண்மையில் இது அருளையே யொக்கும். நல்லனவிருக்கத் தீயனசெய்து இழிவானைக்கண்டு உண்டாகும் பரிவு இவ்வண்ணம் வெகுளியின் மெய்ப்பாடு பூண்டு விளங்குகின்றது. நேரிய போரின் நெறிமுறை நீங்கிக் கள்ளப்போர்க் கல்வியைக் கையாண்டான் கரனென இராமன் கொண்ட இவ்வெகுளியின் தன்மை இன்னதே. எனின், தீமை செய்வார்பால் பாய்கின்ற வெகுளி மூன்று வகையினில் அடங்கவல்லது. அத்தீமை செய்யப்பட்டவன் தானுதல்பற்றி எழும் இழிவுடைய வெகுளி ஒன்று. அத்தீமை செய்யப்பட்டவன் பிறனுதல் பற்றி விளைகின்ற செவ்விய வெகுளி இரண்டாவது. இந்நிலையன் இலக்குவன். சான்றோர் இவ்விரண்டிற்கும் வெகுளார். தானேனும் பிறனேனும் மற்றொருவன் செய்யுந் தீமைக்கு ஆளாவதெல்லாம் பண்டைவினையின் பயனே என்னும் துணிவினால் ஆறிய உள்ளத்தராகி, அத்தீமையைச் செய்தவனை முனியப்புகார். அளியன் செய்த தீவினையே அன்றில்லாக வந்தாயோ, என்னுங் கொள்கையைக் கைக்கொண்டு இயங்கும் நீர்மைத்து இது. "விதியின் பிழை இதற்கு என்னை நீ வெகுண்டது" என்று இலக்குவனுக்கு அன்று இராமன் பரிவுடன் எடுத்துக் காட்டியதும் இதுவே. ஆதலின் அவ்வினையை நிகழ்த்தி வைப்பதன்றி வேறொன்றல்லாத கருவியேபோல்வாராய அத்தீமை செய்தோரை வெகுளல் அறிவன்றென்பதைத் தேறிய உணர்வினர் இவர். முன்னினத்தினும் உயர்ந்ததாம் இம் மூன்றாம் இனத்தைச் சேர்ந்தவன் இராமன். இவ்வினத்தவர்களும் ஒருகால் வெகுளலாம். தீமை எய்துவது அவரவர் தம் விதியின் பயனே எனச் செய்யப்பட்டார் சார்பில் நினைக்கலாமாயினும், அத்தீமையைச் செய்தவன் அதுசெய்ததும் அவனுடைய பண்டை வினையாற்றான் நேர்ந்ததென்று எண்ணுவது இயல்பன்று. ஆதலின், செய்யப்பட்டாரைக் கருத்திட் கொள்ளாமல் செய்தவனைமாத்திரம் நினைத்து, "இக்கொடியோன் ஏன் இத்தீமை புரியலுற்றான்" என்று கொள்கின்றசினம் சான்றோர் சிறப்பைக் குறைத்திடாது. கரன் மாயப்போர் செய்யத் துவக்கியதும், அதற்கு இலக்காவார் அங்கு ஒருவருமில்லையாயினும், "போருக்கும் ஒரு நெறியிருக்க அதனைத் தவிர்த்து ஏன் இவன் அடாதன செய்கின்றான்' என்ற வெகுளி இப்பொழுது இராமனுக்குப் பிறந்தது. இதுகாறும் முறுவல் பூத்த முகத்தினுடன் சமர்செய்பவைத்த இராமனை இப்பொழுதே வெகுளிபெறச் செய்த கம்பர்தம் தத்துவம் இதுவே. "வீரனும் வெகுண்டான்" என்பதிலுள்ள உம்மையினகவயின் இத்துணைத் தத்துவமும் அடங்கியிருக்கின்றது. இவ்வெகுளியின் நுட்பத்தில் இராமன் இலக்குவனினும் ஒருபடி உயர்கின்றான் என்பதைக் காட்டவே, கம்பர் இதற்குப்பின் வருஞ் செய்யுளொன்றில், "இலக்குவற்கு முன்வந்த இராமன்" என்னுங் கருத்துடை யடைமொழிகளால் இவ்வீரனை யழைக்கின்றார் போலும்.

வில்லுடைய வீரனிவன் இராமன் வெகுண்டான். சொல்லுடைய வீராம் புலமையோர் இங்குரைத்த இவ்வொரு நோக்கத்தாலும் வெகுளமாட்டார். அவருடைய நுண்ணுணர்வு இன்னுமொருபடி மேற்சென்று உண்மையை எட்டவல்லதாதலின், தீமை செய்யப்படுபவர் செய்யப்படுவதன்றியும் தீமையைச் செய்வார் செய்வதும் அவர் வினையின் காரியமாய்த் தானே நிகழும் என்ற உறுதியை உட்கொண்டவர்க்கு எவ்வாற்றானும் வெகுளி பிறக்கும் நெறியில்லை. இன்னவரில் ஒருவராய கணியன் பூங்குன்றன்,

யாது மூரே யவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்ந்த லதனினு மிலமே

என்று பாடிய இப் புறநானூற்றுத் திப்பியப் பாட்டில் மேலோர்க் கெல்லாம் மேலோர்தம் உத்தமோத்தம இலக்கணம் கூறப்பெற்றிருப்பதைக் காணலாம்.

கட்டளைக்கல் இதுவாயின் இராமன் இங்கு வெகுளி கொண்டதும் அவனுக்குச் சிறிது குறையே செய்ததென நினைத்தல் வேண்டும். குற்றம் என்ற ஒன்று எஞ்ஞான்றும் எந்நிலையினும் யார்மாட்டும் குற்றமே. அளவு நிலைமை முதலிய சார்புகளைப்பற்றிச் சிற்சில செவ்விகளில் குற்றமொன்று குணம்போல் தோன்றலாமாயினும் வெளித்தோற்றத்தைத் துளைத்து நோக்கவல்லார்க்குக் குற்றம் குற்றமேயாய் விளங்கிநிற்கும். ஒருவனைக் கொல்வது கொலைக்குற்றமாவது, அதுவே அமர்க்களத்தில் ஆயிரம்பேரைக் கொன்று அக் குற்றத்தின் அளவினைப் பெருக்கினால், வீரமெனப்புகழப்படுகின்ற பேதைமையை அறியவல்லார் மிகச்சிலர். முக்குற்றங்களில் ஒன்று வெகுளி. இராமனுக்கிது இங்குச் செம்மைசேர் நீர்மையால் விளைந்ததாயினும் குற்றமேயன்றிக் குணமெனக் கொள்ளற் குரியதாகாது. குற்ற மொவ்வொன்றிற்கும் அதன் தண்டனை தொடர்ந்தே தீரவேண்டு மென்பது நிகிலத்து நிரந்தரமாய விதிகளிலொன்று. ஆதலால் அடுத்த செய்யுளில், வெகுளியுடன் இவ்விராமன்,

முடிப்பெ னின்றொரு மொய்கணை யாலெனாத்
தொடுத்து நின்றுயர் தோளுற வாங்கினன்
பிடித்த திண்சிலை பேரகல் வானிடை
இடிப்பி னோசை படக்கடி திற்றதே

[இப்பொழுது வலிய அம்பு ஒன்றினாலே இவனைத் தொலைப்பேன் என்று நிலைநின்று ஓர் அம்பை வில்லிற் பூட்டி வலிய தன் தோளளவு வளைத்து இழுத்தான். அதனால், இராமன் பிடித்திருந்த வலிய வில்லானது, அகன்ற பெரிய வானத்திடை யுண்டாகும் இடியைப்போன்ற ஓசை உண்டாம்படி விரைவில் ஒடிந்தது]

என எடுத்துக் காட்டுகின்றனர் கம்பர். "திண்சிலை" எனக் கூறியதால் இது சிலையின் இழுக்கன்று. வெகுளியின் மயக்கத்தால் வலி கடந்து வாங்கிய வில்லாளிக்கு இப்பொறப்பு உறுகின்றது. பகைவனால் தன் கைச்சிலை முறிக்கப்பெறும் இழிவினைப்பற்றிப் பேசவேண்டா. தானே இழுத்து முறித்தலும் ஒரு வீரனது சிலைக்கல்வித் திறமைக்குச் சிறிது இழுக்கே பூசிவைக்கின்றது. வெகுண்டதன் பயனாய் இராமன் இப்பொழுது இச்சிறு இழுக்குடைய நிலைய னாயினன் என்று கம்பர் கூறாமற் கூறுகின்ற கொள்கை இங்குக் குறிக்கொள்ளற் குரியதே. இழுக்கொன்று இவ்வண்ணம் இராமனுக்கு இழைத்துவைக்கலாமோ கவிக்கரசு கம்பர் என வெள்கவேண்டா. கவிக்கரசு அவராயதாற்றான் இவ்வண்ணம் அரிதிற் செய்தாரென்று துணிந்து செப்பலாம். ஏனையோர் அஞ்சி அயர்ந்திருப்பார். இராமனது குற்றத்தினளவு பயனைச் சேர்ப்பிக்க வேண்டியது நீதியே. இராமனேதான் ஆயினும் என்! இடம் நோக்காமல் இந்நீதி வழங்குகின்ற வரலாற்றை மறவாமை கவிதையின் பெருமைகளுள் மிகச் சிறந்ததொன்று. ஆங்கிலத்தில் Poetic justice என்று புகழப்பெறும் இக் கவிதாநீதியை நிகழ்த்திக் காட்டுவதில் ஷேக்ஸ்பியருக்குப் பிற்படுவரோ கம்பர்! இப்பொருளில், விதிக்கு விதியாகும் விற்றொழில் இராமனிடத்தினும் இருந்ததில்லையே.

* இவ்விடயத்தின் விளக்கமும் விரிவும் முன் 4-வது வால்யூம் 527-வது பக்கத்தில் உரைக்கப்பெற்றிருக்கின்றன.

கலாநிலயச் சொல்லூடாட்டம். 6.

இடம்—வலம்

1. குதிரை.
3. ஆதனம்.
6. துர்க்கை.
7. வண்டு.
9. முதிராத.
10. பார்ப்பான்.
12. அழகு.
14. அறிவு.
15. ஒலி.
17. ஓர் வள்ளல்.
19. ஆராய்ச்சி.
22. பாணகவி இயற்றிய ஓர் வடமொழிக் காவியம்.
25. கைம்பெண்.
26. வராதே.
27. தபசு. [களில் ஒன்று.
29. ஐம்பத்தாறு தேயங்
30. வாகனம்.
31. பள்ளம்.
32. உதரக்கனல்.
34. தலைவன்.
35. இராஜாங்கம்.

■	1		2	■	3	4		■	5
6		■	7	8			■	9	
10		11			■	12	13		
■	14			■	15				■
16	■		■	17		■		■	18
19	20		21	■	22	23		24	
25		■	26				■		■
■	27	28		■	29				■
30			■	31			■	32	33
	■	34				■	35		

மேல்—கீழ்

1. ஒரு சுவை.
2. வேற்றுமை.
3. கொடுக்க.
4. பிரகாசம்.
5. ஒரு தானியம்.
6. குவளைமலர்.
8. அரசன்.
9. கலைமான்.
11. ஓர் இராகம்.
13. வஞ்சனை.
15. ஒரு சோழ அரசன்.
16. குடை.
18. இரத்தம்.
20. மானிடர்.
21. ஓர் மதம்.
23. கொளுத்தல்.
24. வமிசம்.
28. தங்க.
30. காற்று.
31. காட்டுப் பசு.
33. குழந்தை.

கடைசிநாள் :—1932 வருடம், செப்டம்பர் மாதம், 12 தேதி.

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற சேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, சேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் சேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை, மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

குறிப்பு:—கலாநிலயச் சொல்லூடாட்டம் 5-க்கு விடையும் முடிவும், செப்டம்பர் மாதத்திய 1உ இதழில் வரும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
ச்யாவனப்ராச
ஜீவலதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்

தைலங்கள்:
அமிர்தாமலக
பிருங்காமலக
லக்ஷ்மீகுமார
ஹிமஸாகர

"பாலலதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவாால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)
கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
(தபால் பில்லுடன் இவ்விடத்திற்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிறுகராதியாக உதவுந் தகையது.
விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.
விலை அணா **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகரவெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணா **0-6-0**

கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciatve forword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை

199148

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் வைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:— அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிலாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

பலசாலிகள் மஹாநாடு:—தமிழ் நாட்டுப் பலசாலிகள் மகாநாடு ஆகஸ்டு மாதம் 13, 14 தேதிகளில் புரொபஸர் K. V. ஐயர் தலைமையில் காரைக்குடியில் நடைபெறும். ஸ்ரீமான் S, RM. CT. ஜம்புலிங்கம் செட்டியார் வரவேற்புக்கழகத் தலைவர். தமிழ் நாட்டு மக்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டு நோயில்லாது சுகஜீவிகளாய் வாழ்ந்திருக்க வேண்டுமென்னும் நோக்கங்கொண்டே இம்மஹாநாடு நடைபெறுகின்றது. உடற்பயிற்சிப் பிரசாரம் எளிதில் எங்கும் பரவவேண்டுமெனும்நோக்கமுடைய சாண்டோ சோமசுந்தரம் செட்டியார் தம் விடாமுயற்சியே இம் மஹாநாடு நடப்பதற்கு முக்கியகாரணமாகும். இம்மகாநாட்டிற்கு, மிஸ்டர் R. போக்ஸ் துரை அவர்கள் O. B. E. M. L. C. திறப்புவிழாத்தலைவரும்; தேவகோட்டைச் சப்கலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ R. M. சுந்தரம் அவர்கள் M.A.I.C.S. பரிசளிப்புத் தலைவரும் ஆவார்கள்.

***

வெறும் பேச்சு:—லண்டனிலுள்ள அயல்நாட்டுப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள், மாஜி மந்திரி லாயிட் ஜார்ஜ் அவர்களுக்கு ஒரு விருந்தளித்தனர். அவ்விருந்தில் லாயிட் ஜார்ஜ், ஆயுதப்பரிஹாரத்தைப் பற்றியும், உலகத்தில் யுத்தம் நடவாதபடி செய்துவிடல் என்பது பற்றியும் சர்வதேச சங்கத்தில் பேசப்படும் பேச்செல்லாம் வீண்பேச்சென்பது தமது அபிப்பிராயமென்று ஒரு பிரசங்கம் செய்தார். அக்காலை அவர் கூறியதின் சுருக்கம்:—

ஆயுதங் குறையவும், யுத்தம் இல்லாதுபோகவும் பத்துவருடங்களாக முயற்சிகள் செய்தாய்விட்டது. பத்து வருடங்களாய்க் கை குலுக்கியும் ஆய்விட்டது. பத்துவருடங்களாக வேற்றுமையில்லாத முடிவுகளும் பிரதிநிதிகளால் செய்யப்படுகின்றன. ஆயுதங்கள் குறையவேண்டுமென்பதை எல்லோரும் மஹாநாட்டில் ஒப்புக்கொள்கின்றனர். இதற்கு விரோதமாய் எவரும் இருக்கவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் எந்த மஹாநாட்டிலும் இவ்வளவு ஒற்றுமையுடன் தீர்மானங்கள் செய்யப்படவில்லை. வியாபார விஷயமான எல்லாத் தடைகளும் அகலவேண்டு மென்பதும் ஒரு முக்கியமான பிரச்னை. இவ்விஷயத்திலும் எல்லோரும் ஏகோபித்த அபிப்பிராயமுடையவர்களே. இம்மாதிரி பத்து வருடங்களாக எல்லா நாட்டாரும் கூடுவதும், பேசுவதும் ஏகோபித்துத் தீர்மானங்களைச் செய்வதுமாயிருக்கின்றனர். இதுதான் இந்நாள் நிலை.

***

ஒரு கேள்விக்கு விடையாகச் சென்னைச் சட்டசபையில் கூறப்பெற்ற பதில்:—சென்னை நகரிலும், சென்னை இராஜதானியிலுள்ள ஜில்லாக்களிலுமாக இருக்கும் மோட்டார் வண்டிகளின் கணக்கு வருமாறு:—

மோட்டார் பஸ்கள்	4171
மோட்டார் லாரிகள்	1037
மோட்டார் கார்	12514
மோட்டார் சைக்கில்	2247
மொத்தம்	19969

இந்த 19969 மோட்டார் வண்டிகளால் வருடலைசென்ஸ் வரும்படி 80 லட்சம் ரூபாய்.

படுக்கை அறைக்கு 15 லட்சம் போன்:—இங்கிலாந்தில் சமீபத்தில் இறந்துபோன மேஜர் ஜாக் கோட்ஸ் என்பவர் சிறந்த பணக்காரர்களில் ஒருவர். இவர் பருத்தி வியாபாரத்தில் பொருளீட்டினவர். எண்ணெய் வர்த்தகத்தில்பெரும்பொருள் ஈட்டிய லார்ட் ரே என்பவரிடமிருந்து இவர் ஒரு மாளிகையை வாங்கி, அதைப் புதுப்பித்துக் கட்டினார். இன்னதற்கு ஆசியா ஐரோப்பாவிலுள்ள நகரங்களுக்கெல்லாம் ஆட்களையனுப்பிப் பல உயர்ந்த சாமான்களைச் சேகரித்து வேலை துவக்கினார். ஸ்பெயினிலிருந்து வர்ணந்தீட்டிய சலவைக்கற்கள் கொண்டுவரப்பெற்றன. ரோமாபுரி அரசவம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரபுவின் வீட்டிலிருந்து ரோஜாப்பூவர்ணமுள்ள கட்டில்வாங்கப்பட்டது. பாரசிக அரசர் மாளிகையிலிருந்து இரத்ன கம்பளங்கள் வாங்கப்பட்டன. மாளிகையின் முன்பக்கம் இத்தாலிய நாட்டு அரண்மனையின் தோற்றமுடையது. படுக்கை அறைக்கு 15லட்சம் பவுன் செலவாம். படுக்கையறை முழுதும் சலவைக் கற்களாலமைந்திருக்கின்றது. அவர் தமக் கொரு ஸ்நான அறையும், அவரது மனைவிக்கு ஒரு ஸ்நான அறையும் அம்மாளிகையில் அமைத்திருக்கின்றார். ஸ்நான அறைக்கு 16 ஆயிரம் பொன் செலவாயிற்றாம்.

***

பெஷாவர் வயித்தியசாலைத் தலைவரான காப்டன் கோல்ட் ஸ்டீம் என்பவரைக் குத்திக்கொன்ற அப்துல் ரஷீத் என்பவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது என்றும், விசாரணை காலத்தில் ஜூரிகளாயிருந்த 5 பேரும் முஸல்மன்கள் என்றும், அவர்கள் அவன் குற்றவாளி யென்ற முடிவுக்கு வந்தனர் என்றும் ஸ்டார் செய்தி கூறுகின்றது.

***

உணவும் உடலும்:—சென்னையில் வயித்திய நிபுணர் என்று பேர் பெற்ற டாக்டர் குருசாமி முதலியார், உணவுப்பொருள் என்னும் விஷயமாய்ச் செய்த பிரசங்கச் சுருக்கம் வருமாறு:—

நமது தேகம் நோயில்லாமல் நல்ல ஸ்திதியிலிருப்பதற்குச் சத்துள்ள ஆகாரங்களை நாம் உட்கொள்ள வேண்டும். பாலும் கீரையும் உடம்பிற்கு மிக நல்ல உணவாகும். புஷ்டியான மாட்டினுடைய பாலாக இல்லாவிடில் பாலில் நோய்க்கிருமிகள் அதிகமிருக்கும். நல்ல பால் கிடைக்காமற்போனால் அதைத் தயிர் செய்து சாப்பிடவேண்டும். நமது தென்னாட்டு முன்னோர்கள் உணவுடன் மோர் சேர்த்துக்கொண்டமையினாற்றான் நோயில்லாது இருந்தனர். அரிசியினும், கோதுமை சத்துள்ள உணவு. எனினும் கோதுமை உணவு கொள்பவர்களுக்கு நீரடைப்பு வியாதி வருகின்றது. தென்னாட்டில் அரிசி குத்தப்படும் முறை அரிசிச் சத்தைக் கெடுத்துவிடுகின்றது. கிழங்குகளில் உருளைக்கிழங்கு சர்க்கரைவள்ளிக் கிழங்குகளை உண்ணலாம். மஞ்சள் நிறம் உள்ள எல்லாப் பழங்களும் உடம்பிற்கு நல்லவையே. ஆரஞ்சுப் பழத்தில் முதல்தரமான உணவுச்சத்தும், மாம்பழத்தில் இரண்டாந்தரமான உணவுச்சத்தும் இருக்கின்றன. மூன்றாந்தர சத்து விதைகளில் இருக்கின்றன. இம்மூன்று [illegible] துக்களும் அடங்கிய உணவை [illegible] கொண்டால் நோயற்ற வாழலாம்.

Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—8002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேஹோல் கவர்களும், திம்பிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.

5 டப்பிகள் ரூ. 4.

இனம்! காம சாஸ்திரம் இனம்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

:: பாகவத வினு விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படங்களும் கொண்டது. விரிவான அட்டவணையும், கிருஷ்ணலீலை, லீலா சுகர் கதை போன்ற பலமுக்கியமான விடயங்களின் மெய்க் கருத்தை விளக்கும் அநுபந்தங்கள் அடங்கியது. ரூ. 2.

ஸ்ரீலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)